பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 24 திங்கட்கிழமை (08-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:225

# பல்வேறு பொருள்கள் மீதான வரி நீக்கம் அல்லது குறைப்பு

## நிதி அமைச்சர் சொக்ஸி அறிவிப்பு

கொழும்பு,ஜூலை8

**அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு பெறுமதி சேர் வரி ('வற்' வரி), தேசிய பாதுகாப்பு வரி ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அந்தப் பொருள்களின் விலை 6.5 வீதம் குறையும்.**

**மின்சாரம், எரிபொருள் கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன. அதனால் பொருள் உற்பத்திச் செலவுகள், மக்களின் பஸ், ரயில் பிரயாணக் கட்டணங்களும் கணிசமான அளவு குறையும்.**

**- மேற்கண்டவாறு நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி நேற்று தொலைக் காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.**

மக்களின் வாழ்க்கைச் செலவுக் குறைப்பு நடவடிக்கை பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரிசி, அரிசிமா, தேங்காய், பழங்கள், மரக்கறிகள், முட்டை, பால்மா, திரவப்பால் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்படும். இவற்றின் மீதான 6.5 வீத பாதுகாப்பு வரி நீக்கப்படுவதாலும் புதிய 'வற்' வரியிலிருந்து அவற்றுக்கு விலக்களிக்கப்படுவதாலும் விலைக்குறைப்பு சாத்தியமாகியுள்ளது.

இறக்குமதி மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள் ஆகியவற்றுக்கும் வரி விலக்கு. இதனால் அவற்றின் விலைகள் 8 சதவீதம் குறையும்.

இந்தியாவிலிருந்து குறைந்த விலையில் கோதுமை மா இறக்குமதி செய்யப்படுவதால் அந்த மா ஏனைய மாவை விட குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும். பாண் விலை இதனால் மேலும்குறையும்.

மின்சாரக் கட்டணம் மீதான 12.5 வீத வரி 10 சதவீதமாகக் குறைக்கப்படும்.

டீசலின் விலை லீற்றர் ஒன்றுக்கு 2 ரூபா 50 சதத்தாலும் பெற்றோலின் விலை லீற்றர் ஒன்றுக்கு 6 ரூபாவாலும் குறைக்கப்படுகிறது.

எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்படுவதால் கைத்தொழில் பொருள்களின் விலைகள் குறையும். போக்குவரத்துச் செலவு குறைவதால் உணவு, மரக்கறி ஆகியவற்றின் விலைகளும் குறையும்.

தனியார் பஸ் உரிமையாளர்களினால் அறவிடப்படும் பஸ் கட்டணங்களும் அரசாங்கத்தினால் குறைக்கப்படும்.

(14ஆம் பக்கம் பார்க்க)



வன்னியில் நடந்த கரும்புலிகள் தின நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஈகச்சுடரினை ஏற்றும் போது எடுக்கப்பட்ட படம். தளபதிகள் அருகில் காணப்படுகின்றனர்.

## முஸ்லிம் அமைச்சர்கள் கரிகாலனுடன் பேச்சு!

### கல்முனையில் நேற்றுச் சந்திப்பு

மட்டக்களப்பு,ஜூலை8

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் முஸ்லிம் அமைச்சர்களும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு - அம்பாறை பிரதேசங்களுக்கு விஜயம் செய்த முஸ்லிம் அமைச்சர்கள் குழ கல்முனையில் புலிகளின் சிறப்பு அரசியல் பொறுப்பாளர் கரிகாலன், அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பாபா ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

சுமார் ஒருமணிநேரம் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது அண்மையில் கிழக்கில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து இருதரப்பினரும் கவலை வெளியிட்டனர்.

முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்துப் பேசும்போதும் சகல முஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சிறைச்சாலைக்கு பண்ணையில் புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,ஜூலை8

யாழ்.கோட்டைக்கு அருகில் - பண்ணையில் - சிறைச்சாலைக்கென புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிறைச்சாலை ஆணையாளர் உபாலி சமரவீர தலைமையிலான அறுவர் கொண்ட குழு சிறைச்சாலைக்கான கட்டடம் அமையவிருக்கும் இடத்தைப் பார்வையிட்டது.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா, யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா ஆகியோரை நேற்று மாலை சந்தித்த குழு இங்குள்ள நிலைமை குறித்துக் கேட்டறிந்தது.

அநுராதபுரம், வவுனியா மேல் நீதிமன்றங்களில் உள்ள 12 வழக்குகளுக்கான கைதிகளை இங்கிருந்து தரைவழியாக அழைத்துச் செல்ல சிறைச்சாலை நிர்வாகம் தயாராக இருக்கின்றது என்றும் -

பாதுகாப்பு அமைச்சு அதற்கு அனுமதிவழங்க மறுத்துள்ளது என்றும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

### தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிப்பதால்

## வைகோவின் ம.தி.மு.கவை தடைசெய்ய ஜெயா முடிவு!

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிப்பதற்காக வைகோவை கைது செய்யப்போவதாக அறிவித்துள்ள தமிழக முதல்வர் ஜெயலலிதா, வைகோவின் மறுமலர்ச்சி தி.மு.கவையும் தடைசெய்ய முடிவு எடுத்திருக்கிறார். அதற்கான சட்ட ஆலோசனைகள் இப்போது நடந்துவருகிறது.

வைகோவைப் 'பொடோ' கைது செய்யும் அறிவிப்பை ஜெயலலிதா வெளியிட்டதும் ம.தி.மு.க. (செயற்குழு) சென்னையில் அவசரமாகக் கூடி பொதுச் செயலாளர் வைகோவைப் போலவே கட்சியும் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. அதையடுத்தே ஜெயலலிதா ஆவேசமடைந்து ம.தி.மு.க.வைத் தடைசெய்வது என்ற முடிவுக்கு வந்தார். (உ)

### யுத்தநிறுத்த மீறல் விவர அறிக்கை இன்று வெளியாகும்

கொழும்பு,ஜூலை8

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்த நாள்முதல் இடம்பெற்ற யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு இன்று வெளியிடவிருக்கிறது.

கடந்த நாலரை மாதங்களாக இருதரப்பினரின் யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பான முழு விவரங்களும் இந்த அறிக்கையில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### மாத்தறையில் குண்டுவெடிப்பு

கொழும்பு,ஜூலை8

மாத்தறையில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த இசைநிகழ்ச்சியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 40 பேர் காயமடைந்தனர்.

தனியார் வானொலி நிலையம் ஒன்று நடத்திய இந்த இசை நிகழ்ச்சியின் போது இரு இளைஞர் குழுக்கள் மோதிக்கொண்டதாகவும் -

அச்சமயம் இடம்பெற்ற குண்டு வெடிப்பிலேயே 40 பேர் காயமடைந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்களில் 9 பேர் பெண்களாவர். (உ-3)

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் உள்ளே ☛**

## கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று கிளிநொச்சி வருகை

### தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஜூலை8

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொனட் புருஜோவிட விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வனுடன் நேற்று கிளிநொச்சியில் கலந்துரையாடியுள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை சரிவர நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகள் தொடர்பாக இருவரும் கலந்துரையாடினர்.

நேற்றுக் காலை 8.30இற்கு ஹெலிக்கொப்டர் மூலம் கிளிநொச்சி வந்த புருஜோவிட் நண்பகலே கொழும்பு திரும்பினார்.

இதேவேளை -

புருஜோவிட் நாளை செவ்வாய்க்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு விடுதலைப் புலிகளின் மட்டு., அம்பாறை சிறப்புத் தளபதி கருணா, சிறப்பு அரசியல் பொறுப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் குண்டுத்தாக்குதல் தமிழ்த் தம்பதியர் மரணம்!

திருகோணமலை,ஜூலை8

திருகோணமலை மாவட்டத்தில் திம்புலாகல சேரவில என்னும் இடத்தில் வீடு ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் தமிழ்த் தம்பதியர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் வீட்டுக்காரரான பிரேமதாசன் தியாகராஜா, அவரது மனைவியான பரமேஸ்வரி ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

இத்தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்குப் புலிகள் இயக்கத்தோடு தொடர்பு இருக்கின்றது என்று வீட்டுக்காரரின் தாயார் பொலிஸாரிடம் தெரிவித்திருக்கிறார்.

ஆயினும், தாக்குதலில் ஈடுபட்டோருக்கும் புலிகளுக்கும் இடையே தொடர்பு இருப்பதற்கான ஆதாரம் இல்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவரான தியாகராஜா புலிகள் இயக்கத்தை விட்டு விலகி வந்தவர் என்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (உ-3)

## மர்மப்பொருள் வெடித்து இரட்டையர்கள் மரணம்!

### மொறவெவவில் பரிதாபம்

திருகோணமலை,ஜூலை8

திருகோணமலையின் மொறவெவ பகுதியில் கீழே கிடந்த பந்து போன்ற பொருளை எடுத்து விளையாடிய இரட்டைச் சகோதரர்கள் அப்பொருள் வெடித்ததில் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

அருகில் நின்ற சிறுமி படுகாயமடைந்தாள்.

பவயதான இரட்டைச் சகோதரர்களான சந்தன சாதிரிசிங்க, சதீர திஸநாயக்க ஆகிய இரு சிறுவர்களுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

அருகில் நின்றிருந்த மதுமாசினி (வயது 7) என்ற சிறுமி படுகாயங்களுக்குள்ளானார்.

வீட்டுக்கு அருகில் உள்ள பகுதியில் கண்டெடுத்த பந்து போன்ற பொருளை தமது வீட்டுக்கு எடுத்துச்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலிகள் தின நிகழ்வில் தலைவர் பிரபா....






வன்னியில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட மண்டபத்தில் நூற்றுக்கணக்கான தரை, கடற்கரும்புலிகள் அணி வகுத்து நிற்க, தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் புடைசூழ சரியாக மாலை 7.05 மணிக்கு பிரபா பொதுச்சுடரினை ஏற்றி கரும்புலிகள் நாளை நினைவு கூர்ந்த சமயம் எடுக்கப்பட்ட படம்.



கடற்கரும்புலிகள் பாகம் IV ஒளிப் பேழையை கடற்புலிகளின் தளபதி கேணல் சூசையிடமும் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை ரத்தினதுரையிடமும் தலைவர் பிரபாகரன் பெற்றுக்கொள்ளும் காட்சி.



ஈகச் சுடர் ஏற்றிய பின் தலைவர் பிரபாவும் ஏனைய தளபதிகளும் அகவணக்கம் செலுத்துகின்றனர்.



போராளிகள் ஈகச்சுடர் ஏற்றும் காட்சி.

### பாதுகாப்பு அதிகாரி பதவி விலக்கல் விவகாரம்:

# பலஸ்தீனரின் கடும் எதிர்ப்பை எதிர் கொள்கிறார் அரபாத்!

லண்டன்,ஜுலை8

மேற்குக்கரை பிரதேசத்தின் பாதுகாப்புக்கு பொறுப்பாயிருந்த ஜிப்ரில் ரயூப் என்பவரை பதவி நீக்கியது தொடர்பாக பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் கடும் எதிர்ப்பை எதிர் கொள்ள நேரிட்டுள்ளது.

பாதுகாப்புத் தலைமை அதிகாரியான ரயூப்பை பதவி நீக்கிவிட்டு ஜெனின் நகர முன்னாள் ஆளுநர் யுஹைர் மனஸ்ரா என்பவரை பாதுகாப்புத் தலைமை அதிகாரியாக அரபாத் கடந்த சில நாள்களுக்கு முன்னா நியமித்திருந்தார். இந்தப் பதவி விலக்கலை ரயூப் முதலில் எற்றுக்கொண்டதாகக் கூறப்பட்டது.

ஆனால், ரயூப்பின் கீழ் பணியாற்றிய பொலீஸாரும் அவரது ஆதரவாளர்களும் அரபாத்தின் முடிவை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். இதனையடுத்து பதவி விலக மறுத்த ரயூப் பலஸ்தீனத் தலைமைப் பாதுகாப்பு அதிகாரியாக மனஸ்ராவை நியமிக்கும் அரபாத்தின் முடிவு மாபெரும் தவறென்றும் வர்ணித்துள்ளார். பலஸ்தீனர்களின் தன்னிகரில்லாத் தலைவராக இருக்கும் யஸீர் அரபாத், அந்த நிலைமையில் இருந்து இறங்கத் தொடங்கியுள்ளதையே தற்போதைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் காட்டுவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

இதற்கிடையில், ரயூப்பின் ஆதரவாளர்கள் நேற்றுமுன்தினம் அரபாத்தை நேரில் சந்தித்து ரயூப் பதவி விலக்கப்பட்டதற்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இரண்டு மணித்தியாலங்கள் நடந்த இந்தச் சந்திப்பில் ரயூப்பின் ஆதரவாளர்கள் 200பேர் கலந்துகொண்டுள்ளனர்.

அரபாத்தின் தலைமையிலான நிர்வாகத் தலைமைக்கு தற்போதைய நெருக்கடி பெரும் சவாலாக கருதப்படுகிறது. (ஓ)



பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தால் பதவி விலக்கப்பட்ட ஜிப்ரில் ரயூப்பையும் அரபாத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ரயூப்பின் ஆதரவாளர்களையும் படங்களில் காணலாம்.

## பங்களாதேஷில் 42 மீனவரை காணவில்லை!

வங்கக் கடலில் பங்களாதேஷை சேர்ந்த 5 மீன்பிடிப் படகுகள் பலத்த புயல் மழையால் மூழ்கின. படகுகளில் சென்ற 50பேரில் 8 பேரை மட்டும் கடற்படையினர் மீட்டனர்.

டாக்காவுக்கு தெற்கே 120 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள பரிசார் கடற்கரைப் பகுதியில் இச்சம்பவம் நடந்தது. காணாமற்போன 42 பேரை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. (ஓ)

## 2015ஆம் ஆண்டு செவ்வாய்க்கு மனிதரை அனுப்ப ரஷ்யா திட்டம்

மொஸ்கோ,ஜுலை8

எதிர்வரும் 2015ஆம் ஆண்டில் செவ்வாய்க்கிரகத்துக்கு மனிதரை அனுப்பப்போவதாக ரஷ்ய விண்வெளி விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

மருத்துவர், விண்கலத்தைச் செலுத்துபவர், பொறியியலாளர், கட்டளை அதிகாரி என நால்வரும் 2 ஆராய்ச்சியாளர்களும் அடங்கிய குழுவினர் ஒரு விண்கலத்திலும், அவர்களுக்குத் தேவையான பொருள்கள் மற்றொரு விண்கலத்திலும் அனுப்பப்படும் என்றும் -

இவர்களில் மூவர் செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்க மற்றைய மூவரும் செவ்வாய்க்கிரகத்தை விண்வெளியில் சுற்றி வருவார்கள் என்றும் - ரஷ்ய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க்கிரகப் பயணத் திட்டத்துக்கு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான "நாஸா" வினதும், ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தினதும் உதவியை எதிர்பார்ப்பதாக ரஷ்ய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியிலிருந்து செவ்வாய்க்கு சென்று திரும்ப 440 நாள்கள் ஆகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. சுமார் 2கோடி டொலர்கள் செலவாகும். இப்பயணத் திட்டத்திற்கு பிறநாடுகளின் உதவிகளைப் பெறும் முயற்சியில் ரஷ்ய விண்வெளி விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.



ஓவியர் ஒருவரின் கற்பனையில் 'செவ்வாய்க் கிரகத்தில் மனிதன்'

## கவச வாகனம் மோதியதில் தென்கொரிய மாணவிகள் பலி!

### அமெ. படையினர் மீது குற்றச்சாட்டு

சியோல்,ஜுலை8

தென்கொரியாவில் பாடசாலை மாணவிகள் இருவர் மீது கவச வாகனத்தை ஏற்றிக்கொன்றதாக இரு அமெரிக்க இராணுவத்தினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வட கொரிய எல்லை அருகே உள்ள உயிஜேஙவ்பு என்ற கிராமத்தில அமெரிக்க இராணுவத்தினர் கடந்த மாதம் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாகவும் -

அப்பொழுது அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் மார்க்வோக்கர் மற்றும் சார்ஜன்ட் பெனான்டோ நிறோ ஆகியோர் சென்ற கவச வாகனம் வீதியில் சென்று கொண்டிருந்த சிம்மிஷென் மற்றும் ஷின் குயொஷன் ஆகிய இரு மாணவிகள் மீது மோதி நசுக்கியதில் அம் மாணவிகள் உயிரிழந்ததாகவும் -

கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொது மக்களும், பொது அமைப்புகளும் நீதி கோரி போராட்டங்களை நடத்தி வந்தன. இதனையடுத்தே தற்போது சம்பந்தப்பட்ட இரு இராணுவத்தினரும் குற்றம் புரிந்துள்ளதாக தென் கொரியாவில் உள்ள அமெரிக்க இராணுவ நிர்வாகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆயினும் அந்த இரு இராணுவத்தினர் மீதும் மேற்படி விபத்து தொடர்பாக விசாரணை நடைபெற்று குற்றவாளிகளாகக் காணப்பட்டாலும் தண்டனை பெறும் வாய்ப்பு கிடையாதென்றே தென்கொரிய மக்கள் கருதுகின்றனர்.

வடகொரியாவுடனான பிணக்குக்கு பாதுகாப்பளிப்பதாகக் கூறிக் கொண்டு சுமார் 37ஆயிரம் அமெரிக்கத் துருப்புக்கள் தென்கொரியாவில் நிலைகொண்டுள்ளன. இந்தத் துருப்புக்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டாலும் அதனைத் தட்டிக் கேட்கும் அதிகாரம் தென்கொரிய அரசுக்கு கிடையாதென்பதே யதார்த்தம் எனக் கூறப்படுகிறது. (ஓ)

## 'அல்லாவின் தூதன்' என்றவர் கல்லால் அடித்துக் கொலை!

### பாகிஸ்தானில் சம்பவம்

இஸ்லாமாபாத், ஜுலை8

பாகிஸ்தானில் பஞ்சாயத்து தீர்ப்பினால் யுவதி ஒருவர் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தால் ஏற்பட்ட பரபரப்பு அடங்குவதற்கு முன்னர் மத நிந்தனை செய்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கல்லால் எறிந்து கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து கூறப்படுவதாவது:-

பஞ்சாப் மாநிலம் சாக் ஜமரா பகுதியைச் சேர்ந்தவர் ஷாகித் ஷா முக்தர். இறைவனின் கடைசித் தூதர் தானே என்று கூறியதற்காக 1994 இல மத நிந்தனை சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார். மனநலம் குன்றியவர் என்ற அடிப்படையில் 3 ஆண்டுகள் கழித்து விடுதலை செய்யப்பட்டார்.

1997இல் பைசாலாபாத் நகர் வந்தார். அங்கு தனது சகோதரர் வீட்டில் தங்கினார். அண்மையில் சொந்தக் கிராமத்துக்குச் சென்ற அவர், நபிகள் நாயகத்தை நிந்தனை செய்து பேசினாராம். இதையறிந்து ஊர் மக்கள் உடனடியாக அவரை வெளியேற்றினர்.

எனினும் கடந்த வியாழக்கிழமை அவர் ஊர் திரும்பியுள்ளார். அதை அறிந்ததும் உள்ளூர் மதத் தலைவர் மௌலவி பகீர் முகம்மதுவிடம் பொது மக்கள் முறைப்பாடு தெரிவித்தனர். இதையடுத்து மரண தண்டனை பிறப்பித்த அவர், கல்லால் அடித்து தண்டனையை நிறைவேற்றும்படி உத்தரவிட்டார்.

அத்தரை மன்னித்து விடும்படி அவரது குடும்பத்தார் மன்றாடிக் கேட்ட போதும் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

பயத்தின் காரணமாக அக்தர் குடும்பத்தார் இந்தச் சம்பவம் பற்றி முறையிடாத போதும் பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## உக்ரேன் சுரங்கத்தில் தீ விபத்து!

லண்டன், ஜுலை8

உக்ரேனில் நிலக்கரிச் சுரங்கமொன்றில் தீப்பிடித்தது. இதனால் வெளியே வர முடியாது 34 சுரங்கத் தொழிலாளர்கள் சுரங்கத்துக்குள் சிக்கியுள்ளனர்.

டொனட்ஸ்க் பிரதேசத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் நேற்றுக்காலை தீ மூண்டது. அப்போது 114சுரங்கத் தொழிலாளர்கள் தரை மட்டத்திலிருந்து 570 மீற்றர்கள் ஆழத்தில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது சுரங்கத்தின் மேற்புறத்தில் திடீர் என்று தீப்பிடித்துக் கொண்டது.

இதனையடுத்து, சுரங்கத்துள் இருந்த தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் வெளியேறிவிட்டனர். ஆயினும் 34 பேர் வெளியேற முடியாது சுரங்கத்திலுள் சிக்கியுள்ளனர்.



# பஸ்ஸில் பணம் கண்டெடுப்பு!

யாழ்ப்பாணம்,ஜுலை8

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குப் புறப்பட்ட வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் பயணி ஒருவரால் தவறவிடப்பட்ட ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு நடத்துநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பணத்தைத் தவறவிட்டவர் பருத்தித்துறை பஸ் சாலையில் தகுந்த ஆதாரத்தைக் காட்டி அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது.

(ஒ-15)

**DISSERTATION BINDING**

*பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாக கட்டிக்கொடுக்கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/=.*

பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். T.P. 3081.

சிவமயம்

## ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம்
## சிறுவர் இல்லம் - வவுனியா

மேற்படி சிறுவர் இல்லத்தில் உள்ள பிள்ளைகளை அறிவூட்டி, நல்லொழுக்கம் உடையவர்களாக்கக்கூடிய தொண்டு மனப்பான்மையுடன் சேவையாற்றக்கூடிய குடும்பஸ்தர் ஒருவர் அல்லது இருவரினதும் சேவை வேண்டப்படுகின்றது. அவர்களுக்குரிய இருப்பிட வசதிகளும் ஊதியமும் வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் கடிதமூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:-*ஓய்வுபெற்ற ஆசிரியத் தம்பதியினர் விரும்பத்தக்கது.*

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம்,
கோவில் குளம், வவுனியா.
*T.P. :- 024-21685*

அறங்காவலர்.
அகிலாண்டேஸ்வரி சமேத
அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில்.
*T.P. :- 024-22651*

(5509)

## 13ஆம் வருட நினைவஞ்சலி

மண்ணரங்கில்
11
-
02
-
1924



விண்ணரங்கில்
08
-
07
-
1989

### நடிகமணி வி.வி.வைரமுத்து

திதி: 15.07.2002

காலத்தால் அழியாத காவியத்தின் நாயகனே!
ஞாலத்தில் நிகரில்லா நடிகமணி பேர் பெற்றவனே!
கோலத்தில் எளிமையாய், குணக்குன்றாய் வாழ்ந்தவனே!
கொள்கைசேர் நல்நடிகர்குழாம் கூட்டுறவாய்க் கொண்டவனே!
வானம் புகழ் வசந்தகான சபா வடித்துவிட்ட சிற்பரசே!
நடிகரில் நல்முத்தாகி நடிப்புலகில் சத்தான சாகரனே!
மேடைகளில் மறையாது மேதினியில் மறைந்தாயோ
காலந்தான் கடந்தாலும் கரையாது உன் நாமம் எந்நாளும்.

*'சாரங்கா',*
*பிரதான வீதி,*
*காங்கேசன்துறை.* (5592)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், பெறாமக்கள்.

புதிய
போரோ சொப்ட்






Raj Advertising

மிருதுவான, தூய்மையான, அழகிய சருமத்திற்கு கற்றாளைச்சாறு,
கொகும்பட்டர், கிளிசரின் அடங்கிய வாசனை சோப்.
சகல விதமான சருமங்களுக்கும் ஏற்ப சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது.

சந்தைப்படுத்துவோர் PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.

(C-22811)

## உங்கள் இதயம் கவர் தளபாடம்

Nilkamal®

யாழ். வாழ் வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

நில் கமல் தளபாடங்களை வாங்கி இலவசமாக
இன்னும் சில தளபாடங்களை எடுத்துச் செல்லுங்கள்

இலவசம்



ஏதாவது நான்கு கதிரைகளை கொள்வனவு செய்து ஒரு கோவா coffee tableஐ இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
(ஹில்டன் கதிரைகளும், குழந்தைகளுக்கான கதிரைகளும் இச்சலுகைக்குள் அடங்க மாட்டாது.)

இலவசம்



மூன்று ஹில்டன் கதிரைகளைக் கொள்வனவு செய்து இன்னுமொரு ஹில்டன் கதிரையை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்



இலவசம்



Special offer
only Rs.3500/=

இலவசம்



ஒரு மார்வல் சாப்பாட்டு மேசையையும் நான்கு கதிரைகளையும் கொள்வனவு செய்வதன் மூலம் ஒரு ஸ்ரூலை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்.

இச் சலுகையை நீங்கள் யாழ்ப்பாணத்தில் அனைத்துத் தளபாடக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

இச் சலுகை கையிருப்பு உள்ள வரை மட்டுமே....

யாழ் விநியோகஸ்தர்
அம்பிகை களஞ்சியம்
41, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 021-2511

Nilkamal Eswaran Plastics (pvt) Ltd
328, Madapatha Road,
Batakettara, Piliyandala.
Tel: 074-215268, 074-212661, Fax: 074-215267
Customer hotline: 074-212664
E-mail: nilkamal@eureka.lk

(C-22776)

உதயன்

# இந்தியர் பிரச்சினை

இந்தியப் பிரஜைகளாகத் தம்மைப் பதிந்து கொண்டு இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்ற பின்னரும் இலங்கையில் தங்கியிருப்பவர்கள் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று சொல்லி குடிவரவு - குடியகல்வு திணைக்களப் பிரதிக் கட்டுப்பாட்டாளர் சி.ஏ.பொன்சேகா தமிழ் மக்களிடையே பெரும் சர்ச்சையை ஏற்படுத்திவிட்டார்.

மறந்த நிலையில் கிடப்பில் உள்ள ஒரு விடயத்தை கிண்டிக் கிளறி அதற்கு ஏன் உயிர் கொடுக்கிறார் இந்த அதிகாரி என்று மலையகத் தொழிற் சங்கத் தலைவர்கள் நெருப்பெடுக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

நிலைமையைத் தணிப்பதற்கு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க முன்வந்திருக்கிறார்.

இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்றுள்ள ஒன்றரை லட்சம் இந்திய வம்சாவளித் தமிழர்களும் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படுவர் என்பது உண்மைக்கு மாறான கூற்று; போலிப் பிரசாரம் என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

1964ஆம் ஆண்டின் ஸ்ரீமா - சாஸ்த்திரி ஒப்பந்தமும் 1974ஆம் ஆண்டின் இந்திரா - ஸ்ரீமா உடன்படிக்கையும் காலம் கடந்தவை. அவற்றுக்கு அமைய எதுவும் இப்போது நடைபெறப்போவதில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வளவு பெரும் எண்ணிக்கையான மலையக மக்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவது என்று அரசாங்கம் எதுவித முடிவும் செய்யவில்லை. ஆகவே எவரும் அஞ்சத்தேவையில்லை என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

குடிவரவு - குடியகல்வுத் திணைக்கள பிரதிக் கட்டுப்பாட்டாளர் பாவம், அவர் ஓர் அரசாங்க அதிகாரி. அமைச்சர் கூறியதை அவரால் மறுத்துரைக்க முடியாது. ஆனால், அவர் சட்டப்படியான நிலைமை என்ன என்பதைத்தான் சொன்னார். அரசாங்க அனுமதி இல்லாமல் அவரால் எவரையும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பமுடியாது.

ஆனால், சட்டப்படியான நிலைமையை அவர் புட்டுக்காட்டியது ஒருவழியில் நல்லது என்று சொல்லலாம்.

இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்ற இந்திய வம்சாவளித் தமிழ் மக்களை இலங்கையில் தொடர்ந்து தங்கியிருக்க அரசாங்கம் விட்டிருக்கிறது. அதைக் கொண்டு ஒப்பந்தங்கள் கலாவதியாகிவிட்டன, சட்டவலுவை இழந்துவிட்டன என்று கருதும் நிலை ஏற்பட்டது. அது தவறு என்பதை குடிவரவு - குடியகல்வுத் திணைக்கள பிரதிக் கட்டுப்பாட்டாளர் தெரிவித்த கருத்துப் புலப்படுத்துகிறது.

அதனால் சட்டப்படி நிலைமையை சீராக்குவதற்கு அவர் வழி திறந்து தந்திருக்கிறார் என்று கொள்ளலாம் அல்லவா?

இந்தியக் கடவுச்சீட்டை எவரும் விரும்பிப் பெற்றவர்கள் அல்லர். நிர்ப்பந்தத்தின் பேரிலேயே பெற்றார்கள். அவர்களில் 99சத வீதமானவர்கள் இன்று உயிர்வாழவில்லை. அவர்களின் சந்ததியினர்தான் இன்று இருக்கிறார்கள். அவர்கள் இந்தியக் கடவுச்சீட்டைப் பெற்றவர்களும் அல்லர்; இந்தியாவைப் பற்றி அறிந்தவர்களும் அல்லர். அவர்களைப் பிடித்து இந்தியாவுக்கு அனுப்புவது என்றால் எப்படி அது நியாயம்?

இந்த அநியாயமான காரியம் இன்றைக்கு அல்ல, என்றைக்குமே நடக்காமல் சட்டரீதியான ஏற்பாடு செய்தாகவேண்டும். வெறுமனே வாக்குவாதங்கள், கண்டனங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுக் கொண்டு இருக்காமல் உடனே நடவடிக்கையில் இறங்கவேண்டும்.

மலையகத் தமிழர் கட்சிகள் இன்று அரசாங்கத்தில் பங்காளிகளாக இருக்கின்றன. அந்தக் கட்சிகளின் தலைவர்கள் அமைச்சர்களாகவும் பதவி வகிக்கிறார்கள்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும் இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்றவர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பக்கூடாது என்று வாதாடுபவர்கள். அவர்கள் அரசாங்கத்தில் பங்காளிகளாக இல்லாவிட்டாலும் அதன் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள்.

தமிழ் எம்.பிக்கள் அத்தனைபேரும் அரசுடன் நட்புமுறையில் பேசியும் அழுத்தம் கொடுத்தும் இந்தப் பிரச்சினைக்கு சட்டரீதியான தீர்வு காண முடியாதா என்ன?

• இந்தியக் கடவுச்சீட்டுக்காரர்களை இந்தியாவுக்கு அனுப்பக்கூடாது என்பதோடு எந்த நாட்டுப் பிரஜைகளாகவும் இல்லாமல் இங்கே இருப்பவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதற்கும் தமிழ் எம்.பிக்கள் அரசுடன் பேசி ஏற்பாடு செய்யவேண்டும்.

## 'வீடியோ' விநியோகஸ்தருடன் அரசியல் பிரிவு கலந்துரையாடல்

### வீரசிங்கம் மண்டபத்தில் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை8

ஒளிநாடா மற்றும் ஒளித்தட்டுக்கள் மூலம் திரைப்படங்கள் உள்ளிட்ட பொழுதுபோக்கு அம்சங்களை விநியோகிப்போருடன் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறையினர் இன்று கலந்துரையாடல் ஒன்றினை நடத்துகின்றனர்.

இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறுகிறது.

இக்கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட விநியோகஸ்தர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அரசியற்றுறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ)




## இந்தியாவின் அடுத்த ஜனாதிபதியான

# பேராசிரியர் அப்துல் கலாம் இலங்கைக்கும் உறவுக்காரர்!

### அமைச்சர் அஸ்வரிடம் அவரே தெரிவித்தார்

கொழும்பு,ஜூலை8

இந்தியாவின் அடுத்த ஜனாதிபதியாக பேராசிரியர் அப்துல் கலாம் தேர்ந்தெடுக்கப்படுவது அநேகமாக உறுதியாகிவிட்டது. இந்த நிலையில் அவருக்கும் இலங்கைக்கும் இரத்த உறவு உண்டு என்ற தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் தமிழ் - முஸ்லிம் குடும்பத்தில் பிறந்த அப்துல்கலாமின் மாமனார் இன்றும் அநுராதபுரத்தில் வாழ்ந்துவருவது தெரியவந்துள்ளது. இதனால் இலங்கை விவகாரம் குறித்து இயல்பாகவே அப்துல் கலாமுக்கு ஈடுபாடும் அக்கறை உள்ளது.

இந்திய ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் வேட்பாளராகப் பேராசிரியர் அப்துல் கலாம் அறிவிக்கப்பட்டுள்ளார். காங்கிரஸ் உட்பட பல கட்சிகளும் அவரை ஆதரிக்க முன்வந்துள்ளன. இதனால் அவரே இந்தியாவின் அடுத்த ஜனாதிபதி என்பது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

அப்துல் கலாம் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்ட பின்னர் அவர் முதன்முதலாகச் சந்தித்த வெளிநாட்டவர் இலங்கையின் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர்தான். இச்சந்திப்பு சமீபத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக விருந்தினர் இல்லத்தில் நடந்தது.

'இலங்கையில் உண்மையான சமாதானம் நிலைபெறவேண்டும். இது என்னுடைய அங்கலாய்ப்பு மட்டுமல்ல ஒவ்வொரு இந்தியக் குடிமகனதும் எதிர்பார்ப்பும் இதுவேயாகும்' என்று அப்போது அப்துல் கலாம் அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

'இலங்கை எனக்கு அயல்நாடல்ல. அது எனக்கும் சொந்த நாடே. என்னுடைய மாமனார் இப்ராஹிம் மரைக்கார் இன்றும் அநுராதபுரத்தில்தான் வாழ்ந்து வருகின்றார். ஆகவே நான் இலங்கைக்கும் சொந்தமானவன்' என்று பேராசிரியர் அப்துல் கலாம் மகிழ்ச்சியுடன் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.(ஒ)

## வீதிகளின் குறுக்கேயுள்ள மரக்கிளைகளை வெட்டுக!

### யாழ்.பொலீஸார் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை8

யாழ்.நகரில் ஆஸ்பத்திரி வீதி உட்பட முக்கிய வீதிகள் பலவற்றிலும் உள்ள மரங்களில் சிலவற்றின் கிளைகள் போக்குவரத்துக்கு இடையூறாக தாழ்ந்து இருப்பதாகவும் - ஆகவே அந்தக் கிளைகளை வெட்டிவிடுமாறும் -

யாழ்.பொலீஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவினர் யாழ். மாநகரசபையிடம் கேட்டுள்ளனர். வீடுகளில் உள்ள மரங்கள் வீதிகளில் பரப்பிய கிளைகளை வெட்டுமாறு பொதுமக்களிடமும் பொலீஸார் கோரியுள்ளனர்.

தாழ்ந்து வளர்ந்துள்ள இந்த மரக்கிளைகள் வாகனங்களின் கூரையில்பட்டு அவற்றை சேதப்படுத்துவதாக வாகன உரிமையாளர்கள் பொலீஸாருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்தே பொலீஸார் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அத்துடன் இக்கிளைகளில் உராயாமல் தவிர்ப்பதற்காக வாகனங்களை சாரதிகள் திருப்புவதால் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது.

எனவே உடனடியாக அவற்றை வெட்டி அப்புறப்படுத்தும்படி பொலீஸார் மாநகரசபையிடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

யாழ் நகரப் பகுதியின் முக்கிய வீதிகளில் வரையப்பட்டிருந்த போக்குவரத்து விதிகள் தொடர்பான குறியீடுகள் தற்போது அழிந்த நிலையில் இருப்பதால் அவற்றுக்கு வர்ணம் பூசி அவற்றைப் புதுப்பிக்குமாறும் யாழ்.மாநகரசபையிடம் பொலீஸார் கோரியுள்ளனர். (ஒ-4)

### தேசிய, சர்வதேச மட்டங்களில்

## எமது விளையாட்டு வீரர்களின் திறமைகள் வெளிப்பட வேண்டும்!

### அதற்கு உதவுவோம் என்கிறார் பாப்பா

வலி.வடக்கு,ஜூலை8

தேசிய, சர்வதேச மட்டத்திலும் எமது விளையாட்டு வீரர்களின் திறமைகள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும். இதற்கு வேண்டிய உதவிகளையும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் நாம் செய்வோம்.

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் நடத்தப்படும் கூடைப்பந்தாட்ட, உதைபந்தாட்டப் போட்டி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் காலை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில், விளையாட்டு அமைச்சின் உதவிப் பணிப்பாளர் தலைமையில் ஆரம்பமானபோது அங்கு உரையாற்றிய பாப்பா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எட்டு மாவட்டங்கள் மட்டும் கலந்து கொள்ளும் போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெற்றால் மட்டும் போதாது சர்வதேச ரீதியிலும் எமது வீரர், வீராங்கனைகள் தமது திறமைகளை வெளிக்காட்டவேண்டும்.

நாம் ஒரு புதிய திடகாத்திரம் மிக்க சமுதாயத்தை எதிர்காலத்தில் உருவாக்க வேண்டும். விளையாட்டுப் போட்டிகள்மூலம் நல்ல பண்புகளையும் வளர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும் - என்றார். (ஒ-86)

**நாளை**

ஆனி 25
செவ்வாய்க்கிழமை
(09.07.2002)
திதி : சதுர்த்தசி
பிற்பகல் 5.04 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
முற்பகல் 9.19 வரை.
சுபநேரம் : 10.28 - 11.58
ராகுகாலம் : 2.58 - 4.28
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

வாழ்க்கையின் மூலப் பொருளே நேரம்தான். அதனை வீணடிக்கக்கூடாது.

## மருத்துவபீட மாணவர் செப்ரிசீமியாவால் உயிரிழப்பு!

### யாழ்.மருத்துவமனையில்

யாழ்ப்பாணம்,ஜூலை8

செப்ரிசீமியாவால் பாதிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒருவர் யாழ்.மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார்.

5 நாள்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டதையடுத்து கடந்த முதலாம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவனான மூதூர் கங்குவேலிப் பகுதியைச் சேர்ந்த நவரட்ணராசா ரவிசங்கர் (வயது 31) என்பவர் சிகிச்சைக்குட்படுத்தி 6 நாள்களின் பின் மரணமானார்.

இதேசமயம், காலில் ஏற்பட்ட காயம் ஆறாத நிலையில் கடந்த 4ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட சங்கானை, மடத்தடியைச் சேர்ந்த இரத்தினம் ஜெயசீலன் (வயது 32) என்பவர் சிகிச்சைக்குட்படுத்தி மூன்று நாள்களின் பின்பும், காய்ச்சல் மற்றும் வேறு சில நோய்கள் தொடர்பாக கடந்த மாதம் 14ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட மல்லாவி குஞ்சுக்குளம் பகுதியைச் சேர்ந்த குமரையா கோணேசலிங்கம் (வயது43) என்பவர் 35 நாள்களின் பின்பும் அங்கு மரணமாயினர். (ஒ-15)

## திருடன் என்ற சந்தேகத்தில் குடும்பஸ்தருக்கு அடி,உதை!

### முதுகெலும்பு உடைந்தது

யாழ்ப்பாணம்,ஜூலை8

திருடன் என்ற சந்தேகத்தில் தாக்குதலுக்கு உள்ளான ஒருவர் முதுகெலும்பு உடைந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் புங்குடுதீவைச் சேர்ந்தவரும், ஆனைக்கோட்டையில் வசிப்பவருமான நடராசா தனபாலசிங்கம் (வயது50) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொக்குவில் பகுதியிலுள்ள தனது மகள் வீட்டிற்குச் சென்றுவிட்டு இரவு 9 மணியளவில் அவர் திரும்பி வந்து கொண்டிருந்ததாகவும் -

அப்போது 'திருடன் திருடன்' எனச் சத்தமிட்டவாறு ஓடி வந்த சிலர் தன்னைத் தாக்கியதாகவும் -

தான் தனது நிலையைச் சொல்லி விளக்கியும் அதனை கேட்காது தாக்கி, கோப்பாய் பொலஸில் தன்னை ஒப்படைத்ததாகவும் -

படுகாயமடைந்தவர் தெரிவித்துள்ளார். பொலீஸாரால் விலங்கிடப்பட்ட நிலையிலேயே அந்த நபர் யாழ். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-15)

## பாடசாலைகளுக்கு உதவி!

தென்மராட்சிப் பகுதியில் மீண்டும் இயங்க ஆரம்பித்திருக்கும் பாடசாலைகளுக்கு உடனடியாக மலசலகூடம் மற்றும் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தித்தர ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் இப்பகுதியில் சேதமடைந்துள்ள பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைப்பதற்குரிய மதிப்பீட்டுப் பணிகளையும் அந்த நிறுவனம் தற்போது மேற்கொண்டுள்ளது. (ஒ-4)

# புலமைப்பரிசில் பரீட்சை - 2002
## மாதிரி வினாத்தாள் இல. - I
## பகுதி 1

தரம் 5 நேரம்:- 45 நிமிடம்


★ **01ஆம் 02ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சொற்களுக்கு மிகவும் பொருத்தமான படத்தைத் தெரிவுசெய்து அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

01)காடு



(1) (2) (3) (............)

02)பார்வை



(1) (2) (3) (............)

★ **03முதல் 04 வரையிலான வினாக்களில் கோடிடப்பட்ட பகுதிக்கு மிகவும் பொருத்தமான கருத்தைத் தரும் சொற்களைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


03)ஜோதினி சிரிக்கும்போது பற்கள் முத்துக்கள் போல் தெரிந்தன.
(1) மென்மையான (2) வெள்ளைநிறமான (3) பலமான (.........)

04)பிரியந்தன் அல்லும் பகலும் அயராது உழைக்கின்றான்.
(1) பகற்காலம் (2) இராக்காலம் (3) ஓய்வின்றி (.........)

05)அமிர்தன் அகங்காரம் இல்லாத சிறுவன்.
(1) அழகு (2) ஆடம்பரம் (3) இறுமாப்பு (.........)


★ **06-08 வரையுள்ள வினாக்களில் முதல் வரையப்பட்ட நான்கு படங்களின் கோலத்தை அவதானித்து அடுத்து வரவேண்டிய படத்தின் கீழ்க் கோடிடுக.**

06)




(1) (2)

07)



(1) (2)

08)



(1) (2)

★ **கீழ்வரும் சட்டகத்தை அவதானித்து சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


| | | | |
|---|---|---|---|
| கடிதம் | | கல் | புத்தகம் |
| பேனை | மூடி | | பந்து |
| தொப்பி | | பென்சில் | பலூன் |
| இனிப்பு | ஆணி | பூ | |
| | ஊசி | | அப்பிள் |

09)கீழிருந்து மூன்றாவது வரிசையில் இடமிருந்து வலமாக நான்காவது சதுரத்தில் உள்ள பொருள் யாது?
(1) பென்சில் (2) பலூன் (3) பந்து (4) அப்பிள் (.........)

10)மேலிருந்து நான்காவது வரிசையில் இடமிருந்து வலமாக மூன்றாவது சதுரத்தில் உள்ள பொருள் யாது?
(1) ஊசி (2)பென்சில் (3)கல் (4) பூ (.........)


11)மேலிருந்து மூன்றாவது வரிசையில் வலமிருந்து இடமாக நான்காவது சதுரத்தில் உள்ள பொருள் யாது?
(1) பந்து (2) தொப்பி (3) பேனா (4) பலூன் (.........)

★ **கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றினதும் விடைகளைக் குறிக்கும் ஆங்கில எழுத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**





12. உங்களுக்கு இந்த அம்புக் குறி வழியாகவும் அம்புக்குறி குறிக்கும் திசை வழியாகவும் பயணம் செல்ல முடியுமாயின் Pஇலிருந்து Qவுக்கு எத்தனை வித்தியாசமான முறைகளில் செல்லலாம்?
(A) 5 (B) 6 (C) 7 (D) 8 (.........)

13)அமரனுக்கு 15kg அரிசி தேவைப்படுகிறது.
பின்வருவனவற்றுள் எதனை அவன் வாங்குதல் வேண்டும்?





(A) (B) (C) (D) (.........)

14)



தரப்பட்ட சதுரத்தை இரு துண்டுகளாக வெட்டி அத்துண்டுகளை அசைத்து ஒரு செவ்வகத்தை அமைத்தால் அதன் வடிவம் எவ்வாறு இருக்கும்?



(A) (B) (C) (D)(.........)

★ **சரியான விடையின் கீழ் கீறிடுக**

15)சிறுவர்கள் தொலைக்காட்சியில் காட்டும் படங்களையே அதிகம் பார்த்து இரசிக்கின்றார்கள். இதற்குக் காரணம்?
(1)காட்டுன் படத்தின் மீதுள்ள விருப்பமாக இருக்கலாம்.
(2)பார்ப்பதற்கு வேறுபடங்கள் இல்லாமையினால்.
(3)சிறுவர்களுக்கு வேறு பொழுதுபோக்கு இல்லாமையினால்.

16)வழமைக்கு மாறாக அதிகமான பிரயாணிகள் பஸ் நிலையத்தில நிற்கின்றார்கள். இதற்குக் காரணம்?
(1)சுற்றுலாக் காலமாக இருக்கலாம்.
(2)பஸ் நிலையக் கிறிஸ்ட் விழாவாக இருக்கலாம்.
(3)நீண்ட நேரமாக பஸ் நிலையத்தில் பஸ்கள் வராமை.

17)ஏதேனும் வைபவம் ஒன்றின்போது முதலில் வரவேற்புரையும், கடைசியில் நன்றியுரையும் வழங்கப்படுகின்றன. இதற்குக் காரணம்?
(1)ஒவ்வொரு வைபவத்திலும் அது வழக்கம் என்பதனால்.
(2)பிரதம அதிதிகளை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக.
(3)வைபவத்தை விரைவாக நிறைவு செய்வதற்கு.

18)ஒரு வீட்டில் எப்போதும் இருப்பது?
(1)மனிதர்கள் (2) தளபாடம் (3) கூரை (4) குடம்

19)ஒரு கடையில் எப்போதும் இருப்பது?
(1)தட்டுக்கள் (2) தராசுகள் (3) பணம் (4)பொருள்கள்

20)மகள் எப்போதும் தாயிலும்........குறைந்தவளாக இருப்பாள்.
(1)அறிவு (2) பலம் (3) உயரம் (4) வயது


21)ஓர் ஆணைக் காட்டி மல்லிகா "அவர் எனது கணவரின் மனைவியின் மகளின் சகோதரர்" என்று கூறினாள்.
மல்லிகாவுக்கும் மேற்படி ஆணுக்கும் இடையிலான தொடர்பு யாது?
(1)தாய் - தந்தை (2) கணவன் - மனைவி
(3) தாய் - மகன் (4) மாமி - மருமகன்

22)உற்பத்தி என்பது?
(1)பயிர்களைப் பயிரிடுதல்.
(2)மூலம் பொருள்களை முடிவுப் பொருள்களாக்குதல்.
(3)பொருள்களை விற்பனை செய்தல்.

23)தொழிற்சாலை என்பது?
(1)பொருள்களை பரிமாறும் இடம்.
(2)தொழிலாளர்கள் வேலை செய்யும் இடம்.
(3)பொருள்களை உற்பத்தி செய்யுமிடம்.

★ **கீழ்வரும் எண்கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டி எண்களின் கீழ்க் கோடிடுக.**

24)




A,Bஇல் வரவேண்டி எண்கள் முறையே
(1) 15, 8 (2) 16,8 (3) 8, 16 (4) 28,7

25) 0.2, 0.5, 0.8, .........., ..........
(1) 0.10, 0.12 (2) 1.1, 1.4 (3) 1.0, 1.3 (4) 1.2, 1.12

★ **கீழ்வரும் வினாக்களில் உள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் எப்போதும் உண்மையாக இருக்குமெனில் (✓) எனவும், எப்போதும் பொய்யெனில் (✗) எனவும், சிலவேளைகளில் உண்மையாக இருக்குமெனில் (O) எனவும் அடைப்புக்குள் எழுதுக.**

26)சூரியன் கிழக்கில் மறையும். (..........)
27)பெண்களை விட ஆண்கள் பலசாலிகள். (..........)
28)குருடர்களுக்கு கண் தெரியாது. (..........)
29)நுளம்பு நீரில் முட்டையிடும். (..........)

★ **கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினைத் தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.**

30)தரம் 5இல் படிக்கும் ஜோதிகன் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கோயிலுக்குச் செல்வான். 8ஆம் திகதி கோயிலுக்குச் சென்றான். அடுத்த எந்தத் திகதியில் அவன் கோயிலுக்குச் சென்றிருப்பான்?
(1) 14 (2) 15 (3) 16 (4) 18


31)என்னிடம் 25ரூபா இருந்தது. தம்பியிடம் 10ரூபா இருந்தது. அம்மா இன்று இருவருக்கும் சம பணம் தந்தபோது தம்பியிடம் உள்ளதன் இருமடங்கு என்னிடம் வந்தது. அம்மா தந்த பணத்தின் பெறுமதி?
(1) 20ரூபா (2) 5ரூபா (3) 15ரூபா (4) 10ரூபா

32)



இக்கடிகார முகத்தில் 2.00 மணியைக் காட்டும்போது அதனை முகம் பார்க்கும் தளவாடியில அவதானிப்பவர் உணரும் நேரம் யாது?
(1) 3.00 மணி
(2) 12.00 மணி
(3) 10.00 மணி
(4) 9.00 மணி

★ **கீழே ஐந்து மாணவர்களின் நிலைகள் வரிசையாகத் தரப்பட்டுள் ளன. அதன் கீழ் அவர்களது நிலைகள் மாற்றப்பட்ட விபரத்தை வாசித்து அதற்கேற்ப சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**



A B C D E
மித்திரன் சித்திரன் வித்திகன் நித்தியன் சத்தியன்

சத்தியன் சித்திரனின் B இடத்திற்குச் செல்ல, வித்திகன் சத்தியனின் E இடத்திற்குச் சென்றான். நித்தியன் வித்திகனின் C இடத்திற்குச் செல்ல சித்திரன் நித்தியனின் D இடத்திற்குச் சென்றான்.

33)தனது நிலையை மாற்றாத மாணவன்?
(1) மித்திரன் (2) சித்திரன் (3) வித்திகன் (4) நித்தியன் (.........)


34. தற்போது சித்திரனின் இடது கை
(1) சத்தியன் (2) வித்திகன் (3)

35. நித்தியனின் இரு பக்கத்திலும்
(1) சத்தியன், மித்திரன்
(2) சத்தியன், சித்திரன்
(3) வித்திகன், சத்தியன்
(4) வித்திகன், சித்திரன்


★ **கீழ்வரும் குறியீடுகளால் காட்டப்ப இனங்கண்டு அக்குறியீடுகள் குறிக்**

| | | |
|---|---|---|
| MAP+ | TOP - | (36) |
| CAP | APC | (37) |
| 386 | 422 | (38) |

39)




புள் மடித் எடுத் உரு



(1) (2)

40)



## பகுதி -

★ **கீழே உள்ள பந்தியை வாசித்து இ வினாக்களுக்கு விடை எழு க.**

பூமாதேவியைக் கௌவி மூடிக்கொ மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது களை வாரி இறைத்தது போலப் விண்மீன்களின் ஒளி குறையத் வானம் செக்கச் சிவந்து பிரகாசி பொன்மயமான கதிர்களைப் பூ மெல்லப் படரவிடுகிறான். கிழக்கு வ மத்தியில் தங்கத் தகட்டைப் தொடங்குகின்றான். "சூரிய பகவ உயிர்களும் அவனை வரவேற்கி தம் துணைவனை முகமலர்ந்து வ மலர்களும் மொட்டவிழ்ந்து விரிகி

1. மேலே தரப்பட்ட பந்தியில் இயற் எது? ..........
2. இக்காட்சி இறந்த காலத்திலா, எ திலா எழுதப்பட்டுள்ளது? ..........
3. எதனது பிரகாசம் குறைவதாகக்
4. தாமரை மலர்களின் துணைவன் யா
5. மேலே மேற்கோள் குறிக்குள் தர
6. பாடலில் உள்ள அடுக்கு மொ

★ **ஒத்த கருத்துச் சொல்லை எழுது**
7. விண்மீன்கள் ..........................8.

★ **எதிர்க்கருத்துச் சொல்லை எழுது**
9. ஒளி .......................... 10.

11. பந்தியில் சூரியன் எதற்கு உவ

★ **பிரித்தெழுதுக**
12. முகமலர்ந்து ..........
13. மொட்டவிழ்ந்து ..........

★ **ஒருமைச் சொல்லை எழுதுக.**
14. வைரங்களை ....................15. விரி

★ **கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரி இருந்து தெரிந்து எழுதுக.**
16. SKY ..........................
18. FLOWERS ..........................
20. LOTUS ..........................

★ **கீழே பிறந்தநாள் வாழ்த்துப் பத்தி அதனை நன்கு வாசித்து 27 வரை எழுதுக.**

வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கு, சா கொண்ட குணசிங்கம் செல்வராணி வினோதன் தனது பத்தொன்பதாவ அன்று ஞாயிற்றுக்கிழமை தன கொண்டாடுகின்றார். இவரை அம்ம தங்கை கிருசாந்தினி ஆகியோரும் கள், நண்பர்கள் யாவரும் பல்க காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்

21. பிறந்த நாளைக் கொண்டாடுபவ
22. வினோதனின் பெண் சகோதரர்க ஆங்கிலத்தில் எழுதுக. ..........
23. வினோதனின் பிறந்த திகதி யா

இடது கைப்பக்கத்தில் நிற்பவன்?
த்திகன் (3) நித்தியன் (4) மித்திரன் (..........)


கத்திலும் அருகில் நிற்பவர்கள் யாவர்?
ன்
ன்
பன்
ரன் (..........)

ல் காட்டப்படும் கணித பிரசினத்தை
டுகள் குறிக்கும் எண்ணை எழுதுக.


(36) T=.........
(37) O=.........
(38) C=.........



படத்தில் காட்டப்பட்டவாறு புள்ளிக் கோட்டின் வழியே மடித்து வட்டத்துண்டு வெட்டி எடுத்தபின் விரித்தால் தோன்றும் உருவத்தின் கீழ்க் கோடிடுக.



2) (3) (4) (..........)



இந்த முப்பரிமாண திண்ம உருவிற்கு எத்தனை முகங்கள் இருக்கும்? (.........)

## பகுதி -2

நேரம்:- 1மணி 45 நிமிடம்

வாசித்து இல. 01 முதல் 20 வரையுள்ள எழுதுக.

வி மூடிக்கொண்டிருந்த காரிருள் மெல்ல ண்டிருக்கிறது. உச்சி வானத்தில் வைரங் து போலப் பிரகாசித்துக் கொண்டிருந்த குறையத் தொடங்குகின்றது. கிழக்கு ந்து பிரகாசிக்கின்றது. கதிரவன் தனது களைப் பூமாதேவியின் மீது மெல்ல ன். கிழக்கு வானிலே முகிற்கூட்டங்களுக்கு தகட்டைப் போல சூரியன் அசையத் சூரிய பகவானே வருக" எனச் சகல வரவேற்கின்றன. தாமரை மலர்கள் கமலர்ந்து வரவேற்கின்றன. ஏனைய பல ழ்ந்து விரிகின்றன.

தியில் இயற்கை காட்டும் இன்பக் காட்சி
.................................................................

லத்திலா, எதிர்காலத்திலா, நிகழ்காலத் து? .........................................................

றைவதாகக் கூறப்படுகின்றது?

ணைவன் யார்? .............................................

றிக்குள் தரப்பட்ட கூற்றை எழுதுக.

டுக்கு மொழிச் சொல்லை எழுதுக.

ல்லை எழுதுக.
..................8. மத்தியில் ..................................
லை எழுதுக.
10. கிழக்கு ..................................

தற்கு உவமித்துக் கூறப்பட்டுள்ளது?

..........................................

..........................................

எழுதுக.
..........15. விரிகின்றன ..................................

சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை பந்தியில் துக.

................ 17. LIGHT ..............................
................ 19. EAST ..............................
................

த்துப் பற்றிய விவரம் தரப்பட்டுள்ளது. து 27 வரையிலான வினாக்களுக்கு விடை

ல் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக செல்வராணி தம்பதிகளின் ஏக புதல்வன் தொன்பதாவது பிறந்த நாளை 03.02.2002 ழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் வரை அம்மா, அப்பா, அக்கா தயாளினி, ஆகியோரும் மற்றும் உற்றார், உறவினர் வரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு கின்றார்கள்.

ண்டாடுபவரின் முழுப் பெயரை எழுதுக.

சகோதரர்களின் எண்ணிக்கையை
.................................................................

திகதி யாது?

................... வருடம் ..................... மாதம் ......................... நாள்.

24. இந்த ஆண்டு (2002) பெப்ரவரி மாதத்தில் எத்தனை நாள்கள்?

25. வினோதன் எத்தனையாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார் என்பதை உரோமன் எண்ணில் எழுதுக. ..............................

26. மேலுள்ள விபரத்தின்படி 27.02.2002 அன்று என்ன கிழமை?

27. வினோதன் தனது 10ஆவது பிறந்த தினத்தை எந்த ஆண்டில் கொண்டாடியிருப்பார்? ..........................................

★ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

28. நரம்புக் கருவி அல்லாதது எது?
1. வயலின் 2. தம்புரா 3. புல்லாங்குழல் 4. வீணை

29. ஒருவரிடமிருந்து ஒருவருக்குத் தொற்றாத நோய் எது?
1. தடிமன் 2. பல்வலி 3. கண் நோய் 4. சிரங்கு

30. குட்டியைப் பாதுகாக்க விசேட அமைப்பைக் கொண்ட மிருகம் எது?
1. வௌவால் 2. குரங்கு 3. நாய் 4. கங்காரு

31. நீரில் மிதக்கக் கூடிய பொருள் எது?
1. கல் 2. ஆணி 3. காற்றடித்த பந்து 4. குண்டூசி

32. பொருள்களை ஒன்றுடன் ஒன்று உரோஞ்சுவதால் வெளிவரும் சக்தி எது?
1. ஒளி சக்தி 2. வெப்ப சக்தி 3. மின் சக்தி 4. காந்த சக்தி

★ கீழ்வரும் தாவரங்களைப் பொருத்தமான வகைக்குள் எழுதுக.
தேயிலை, கோவா, திராட்சை, இறப்பர், கராம்பு, சவுக்கு, குறோட்டன், சாதிக்காய், கொடித் தோடை, கரட், அந்தூரியம், வாழை.

33. உணவுப் பயிர்கள் - ..........................................
34. பணப் பயிர்கள் - ..........................................
35. பழத் தாவரங்கள் - ..........................................
36. சிறு பயிர்கள் - ..........................................
37. நிழல் மரங்கள் - ..........................................
38. அலங்காரத் தாவரங்கள் - ..........................................

★ பின்வரும் பிரசினங்களை வாசித்து வினாக்களுக்குரிய விடையை எழுதுக.

39. ஒரு பஸ் வண்டியில் 60 பிரயாணிகளுக்கு ஆசனங்கள் உண்டு. ஒவ்வொரு வலைப்பந்தாட்டக் குழுவிலும் ஏழுவிளையாட்டு வீராங்கனைகளும், ஒரு மேலதிக வீராங்கனையும் உள்ளனர். நான்கு வலைப்பந்தாட்டக் குழுக்களும், நான்கு ஆசிரியைகளும் அந்த பஸ் வண்டியில் சென்றனர். பஸ் வண்டியில் எத்தனை ஆசனங்கள் மீதியாக உள்ளன? (.................)

40. ஒரு கல்லூரியைச் சேர்ந்த 436 மாணவர்கள் பஸ்வண்டி மூலம் சுற்றுலாவுக்குச் சென்றனர். ஒரு பஸ் வண்டியில் 50 மாணவர்கள் மட்டும் பயணம் செல்லலாம் எனின் ஆகக் குறைந்தது எத்தனை பஸ் வண்டிகள் தேவையாக இருந்திருக்கும்? (.................)

41. பாத்திமா ஓர் எண்ணை நினைத்தார். அதனை 3ஆல் பெருக்கி அதனுடன் 6ஐக் கூட்டினார். கிடைத்த விடை 30ஆகும். அவர் நினைத்த எண் யாது? (.................)

42. செந்தாளனிடம் 5 3 1 9 என எண் எழுதப்பட்ட நான்கு அட்டைகள் இருந்தன. இவ்வட்டைகளைப் பயன்படுத்தி அவன் உருவாக்கக்கூடிய அதிபெரிய ஒற்றை எண் யாது? (.................)

43. காற்பந்தாட்டம் மு.ப. 8.30 மணிக்கு ஆரம்பமாகி 45 நிமிடங்களுக்கு நீடித்தது. அந்த ஆட்டம் எத்தனை மணிக்கு முடிவுற்றது? (.................)

அ" பகுதிக்குப் பொருத்தமானவற்றை "ஆ" பகுதியில் இருந்து தெரிந்து அடைப்புக்குள் அதன் இலக்கத்தை எழுதுக.

| "அ" | | "ஆ" |
|---|---|---|
| 44. விளம்பரத்திற்குப் பொருத்தமானது | ( ) | 1. நடமாடும் ஆமை |
| 45. பதப்படுத்திய களிமண் | ( ) | 2. சுவரொட்டி ஆக்கம் |
| 46. கடதாசியை மடித்து வெட்டுதல் | ( ) | 3. பாய் உருவாக்குதல் |
| 47. இயங்கும் விளையாட்டுப்பொருள் | ( ) | 4. பூ ஆக்கம் |
| 48. பின்னல் இழைத்தல் | ( ) | 5. செதுக்குதல் ஆக்கம் |

★ கீழே தரப்பட்ட வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

49. இலங்கையின் தேசிய விளையாட்டு எது? ..........................................

50. உலகக் கிண்ணக் காற்பந்தாட்டப் போட்டி 2002 ஆண்டு எந்த நாடுகளில் நடைபெற்றது? ..........................................


51. இ.ஒ.கூ. எனும் குறுகிய பதம் குறிக்கும் முழுப் பெயரை எழுதுக. ..........................................

52. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, சஞ்சிகை, தொலைபேசி இவற்றை ஒருமித்து எவ்வாறு அழைக்கலாம்?

53. உலகில் மிகவும் சனத்தொகை கூடிய நாடு எது? ..........................................

★ ஆரம்ப பாடசாலை ஒன்றில் ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களின் தொகையை இந்த அட்டவணை காட்டுகிறது.

| வகுப்பு | மாணவர் தொகை |
|---|---|
| தரம் 1 | 105 |
| தரம் 2 | 120 |
| தரம் 3 | 115 |
| தரம் 4 | 95 |
| தரம் 5 | 105 |




54. அருகே உள்ள நிரல் வரைபில் தரம் 1ஐ நிழற்றியதுபோல ஏனைய வகுப்புகளையும் நிழற்றிக் காட்டுக.

55. தரம் 3, தரம் 4 வகுப்புகளில் உள்ள மாணவர்கள் எத்தனை பேர்? ..........................................

56. ஆகக் குறைந்த மாணவர் எண்ணிக்கை உள்ள வகுப்பைவிட ஆகக்கூடிய மாணவர்கள் எண்ணிக்கை உள்ள வகுப்பில் எத்தனை மாணவர்கள் கூடுதலாக உள்ளனர்? ..........................................

57. நாடகக் காட்சி ஒன்றுக்காக தரம் 3 மாணவர்களிடமிருந்து ஒருவரிடம் 4 ரூபா வீதம் அறவிட்டால் அவ்வகுப்பிலிருந்து கிடைக்கும் பணம் எவ்வளவு? ..........................................

58. ஆசிரியர் தின விழாவின்போது மாணவர்களுக்கு பிஸ்கட் பரிமாறப்பட்டால் ஒரு மாணவனுக்கு இரண்டு பிஸ்கட்டுகள் வீதம் கொடுப்பதாயின் எத்தனை பிஸ்கட்டுகள் தேவை?
..........................................

59. தரம் இரண்டு மாணவர்களை விளையாட்டு ஒன்றுக்காக 5 குழுக்களாகப்பிரித்தால் இரு குழுவில் எத்தனை மாணவர்கள் இருப்பார்கள்? ..........................................


60. தரம் 5 இல் படிப்பவர்களில் 58பேர் ஆண்கள், பெண்களில் 20 பேர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை. சித்தியடைந்த பெண்கள் எத்தனை பேர்? ..........................................

★ பின்வரும் நியம அலகுகளின் குறியீட்டை எழுதுக.

| | |
|---|---|
| 61. கிலோகிராம் ................ | 64. கிராம் ................ |
| 62. மில்லி லீற்றர் ................ | 65. சென்றி மீற்றர் ................ |
| 63. கிலோ மீற்றர் ................ | 66. மில்லி மீற்றர் ................ |


★ சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

67. இப் பரிசோதனை அமைப்பு காட்டுவது.




(1) திரவ விரிவை
(2) திண்ம விரிவை
(3) வெப்பக் கடத்துகையை

68.




இப்பரிசோதனை அமைப்பு எதற்காகச் செய்யப்பட்டது?

(1) நீரின் திண்ம நிலையைக் காட்டுவதற்கு.
(2) பனிக்கட்டியின் உருகு நிலையைக் காட்ட.
(3) வளியில் நீராவி உண்டு என்பதனை அறிய.

69. சரியான விடை எழுதுக.
(1) பனிக்கட்டி நீராக மாறும் செயற்பாட்டை எவ்வாறு அழைப்பர்? ..........................................
(2) நீர் பனிக்கட்டியாக மாறும் செயற்பாட்டை எவ்வாறு அழைப்பர்? ..........................................

★ 'நான் பாடசாலைக்குச் சென்றால் .......... 'என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக.
ஒரு வாக்கியத்தில் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

70. ..........................................
..........................................
71. ..........................................
..........................................
72. ..........................................
..........................................
73. ..........................................
..........................................
74. ..........................................
..........................................
75. ..........................................

தயாரிப்பு:
திரு. வே. அன்பழகன் (ஆசிரியர்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இது இந்து மதம்

"சாமிஜி" எழுதிய "இது இந்து மதம்" மறுபடியும் வந்துள்ளது. விற்பனையில் சாதனை நிகழ்த்திய சிந்திக்க வைக்கும் சிறந்த புத்தகம். குறைந்த அளவு பிரதிகளே உள்ளன. தனிப்பிரதி ரூ.50/- தொடர்பு: பரணன், 138, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (5632)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1973இல் பிறந்த (மிருகசீரிடம் முதலாம் பாதம்) லண்டன் நிரந்தர வதிவிட பிரஜா உரிமை பெற்ற கணனிப் பொறியியலாளருக்கு (Computer Engineer) 5அடி 2 அங்குலத்திற்குக் குறையாத உயரமுடைய நற்பண்புள்ள பட்டதாரி மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 1561, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5653)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும், அரசாங்க திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகம் பார்ப்பவருமான, 1970ஆம் ஆண்டு பிறந்தவருக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது) தொடர்பு: விளம்பர இல. 1560, மே/பா உதயன். (5620)

## புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான அம்பிகைபாகனின் வழிகாட்டிப் புத்தகம் வந்துள்ளது. குறைந்த அளவு பிரதிகளே உள்ளன. தனிப்பிரதி ரூ 240/- தொடர்பு: பரணன், 138, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (5631)

## இலக்கிய கட்டுரைகள்

சிறுகதை, நாவல், குறுநாவல், நாடகம், இலக்கிய விமர்சனம் எல்லாவற்றிற்கும் தனித்தனியாக விளக்கங்கள் கூறும் ஒரேயொரு நூல் க.பொ.த. மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயன்படக்கூடியது. 350 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல். (5549)

## தவறிவிட்டது

மானிப்பாய் கிழக்கைச் சேர்ந்த முத்துக்குமாரு சண்முகலிங்கம் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 392760237V), விசேட அ.அ. (இல. 0905012124) என்பன மானிப்பாய் மருதடி விநாயகர் கோயிலடியில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி ஆலயத்திலோ அல்லது மானிப்பாய் ஸ்ரீ சச்சிதானந்தா ஸ்ரோர்ஸிலோ ஒப்படைத்துதவவும். (5653)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத் தெரு, ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் வீட்டுடன்கூடிய காணி (ஒரு பரப்பு) விற்பனைக்கு உண்டு. கடை கட்டுவதற்கும் ஏற்ற இடம். விவரங்களுக்கு 143, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (5694)

## விற்பனைக்கு

மானிப்பாய் சந்தை கிழக்கு ஒழுங்கையில் 31/4 பரப்புக் காணி, வீடு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A.மல்லிகா, சுழாவடி தபால் நிலையத்துக்கு அண்மையில், 4 ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (5555)

4அடி நீளம், 3அடி நீளம் உடைய லேத்மெசின் (கடைச்சல் இயந்திரம்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.136, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (5604)

நல்ல நிலையிலுள்ள **Vespa - 150 Original** ஸ்கூட்டர் **Electronic (Grey Colour)** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: C/o வைத்திலிங்கம் விளையாட்டரங்கு வீதி, கல்வியங்காடு. (5679)

3 மாதம் நிரம்பிய வெள்ளை பொமனேரியன் ஆண் நாய்க்குட்டிகளும் 65 நாள்கள் நிரம்பிய அல்சேசன் (செப்பேட்) பெண் நாய்க்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.நடராசா, செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் (பிள்ளையார் கோயில் சந்திக்கு அருகில் பலாலி றோட்). (5687)

பல இனங்களில் கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மோட்டர்கள், மீன் தொட்டிக்குரிய அழகுசாதனப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (6596)

## கருத்துப் பகிர்வு நிகழ்வு

தாவடி,ஜூலை8

தூண்டி இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்துள்ள படைப்பாளிகளுடனான கருத்துப் பகிர்வு நிகழ்வின் முதலாவது அரங்கு இன்று மாலை 5 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்வில் எழுத்தாளர் மாவை.வரோதயனுடனான சந்திப்பு இடம்பெறும். எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன், கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்குபற்றுவர். (எ-ரி)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 20 . 06 . 1930

ஆண்டவன் அடியில் 08 . 06 . 2002

**வேலணை கிழக்கு,**
**முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த**
**அமரர்**

## குருசுமுத்து தேவசகாயம்

*என்றும் இன்முகத்தோடு இன் சொல் பேசி*
*எல்லோர்க்கும் இனியனாய்த் திகழ்ந்தீரையா!*
*வாழ்ந்தது போதுமெனக் காலன் நினைத்தானோ?*
*வாழ்வது முடியமுன் உன்னுயிர் கவர்ந்தானே!*
*மீளாத் துயிலில் நீயிருக்க உன்னினைப்பால் மனைவி, மக்கள்*
*ஆறாத் துயரில் அழுந்துகிறார்! ஆற்றுவமோ துயரிங்கே!!*


**தந்தையின் நினைவாக இன்று (08.07.2002) திங்கட் கிழமை சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலயத்தில் காலை 7.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**- மனைவி மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*முதலாம் வட்டாரம்,*
*வேலணை கிழக்கு.* (5692)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 10 - 04 - 1935

மறைவு 08 - 06 - 2002

## அமரர் ஆறுமுகம் சிவகுரு

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மறைந்த
உங்களை எங்களால் மறக்கவே முடியாது!

**எமது அன்புத் தெய்வமான ஆறுமுகம் சிவகுரு அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

இன்று (08. 07. 2002) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் மற்றும் மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*15/ 7, பிரப்பங்குள லேன்,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (5693)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

# ஓராண்டு நினைந்துருகல்



உதயம் 1953 - 06 - 29

உதிர்வு 2001 - 06 - 19

## அமரர் தம்பு சந்திரசேகரம்

*(விநாயகர் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)*

திதி: 2002.07..08

***ஆயிரம் உறவுகள் இருந்தாலும் 'அப்பா'***
***என்றழைக்க உறவொன்றில்லை! எங்கள்***
***நல்வாழ்வை உங்கள் மூச்சாகச் சுவாசித்தீர்கள்!***
***எம்மைப் பிரிந்து ஒரு வருடம் சென்றாலும்***
***உங்கள் நினைவுகள் என்றென்றும்***
***எம்முடன் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்!***

*உங்கள் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கும்:*

**அம்மா, மனைவி,**
**பிள்ளைகள், சகோதரர்கள்,**
**உற்றார், உறவினர்கள்.**

*தலங்காவல்*
*பிள்ளையார் கோயிலடி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* (5695)


## இலங்கையின் முன்னணி தனியார் வர்த்தக வங்கியான

HATTON NATIONAL BANK LIMITED HNB

## ஹற்றன் நஷனல் வங்கியினால்

கடந்த 11 வருடங்களாகத் தொடர்ந்து நடத்தப்படும்

# கூடைப்பந்தாட்டப் போட்டி

## 2002ஆம் ஆண்டுக்கான போட்டிகள்

*கழகங்கள்:* **ஆண்கள், பெண்கள்**
*பாடசாலைகள்:* **ஆண்கள், பெண்கள்**

**மேற்படி போட்டியில் பங்குபற்றவிரும்பும் கழகங்கள், பாடசாலைகள் தங்களது விண்ணப்பங்களை ஹற்றன் நஷனல் வங்கி யாழ் கிளையில் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றோம்.**

*விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித்திகதி:* 12.07.2002

*அணி ஒழுங்குத் தெரிவு:* 15.07.2002 மாலை 4.30 மணிக்கு

ஹற்றன் நஷனல் வங்கி யாழ். கிளையில் இடம்பெறும்.

அணி ஒழுங்குத் தெரிவின்போது பங்குபற்றும் கழகங்கள், பாடசாலைகளில் இருந்து ஓர் உறுப்பினர் சமுகம் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

## ஹற்றன் நஷனல் வங்கியின்

## சில்வர்லைன் ஓய்வூதிய முதலீட்டுத் திட்டம்

- ஆயுள் முழுவதும் மாதாந்த வருமானத்திற்கு ஓர் உத்தரவாதம்.
- 84 மாதங்கள் மாதாந்தம் சேமித்த பணத்தைவிட அதிகபணத்தை மாதாந்தம் பெற ஒரேவழி.
- 70 வயதுவரை இலவச ஆயுள் காப்புறுதி.
- வைப்புகளுக்கு மேலதிக வட்டி.
- பந்தும் விமன சீட்டிழுப்பில் வெகுமதிமிக்க பரிசில்கள்.
- பின்னுரித்தாளிகளுக்கு என்றுமே மாதாந்தக் கொடுப்பனவு.
- சிறுவர்களுக்கு சிறந்த சேமிப்புத் திட்டம்.
- சகல தரப்பு மக்களுக்கும் வரவுக்கு ஏற்ப சேமிக்க வசதிகள்.
- வங்கிக்கடன் பெறுவதற்கு முன்னுரிமை.

# ஹற்றன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி (சி-22835)

# கைக்கெட்டிவிட்ட சமாதானம் நிரந்தரமாக வேண்டுமானால்...

**'தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளும் அதனால் உருவாகியுள்ள எதிர்பார்ப்புகளும் யதார்த்தமாக வேண்டுமாயின்...' என்ற தலைப்பில் 30.06.2002 திகதிய 'ஞாயிறு லங்காதீப' பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

1983இல் இருந்து சுமார் கடந்த இரு தசாப்தங்களாக இந்நாட்டு மக்கள் சமாதானத்தை வேண்டி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சமாதானத்தை தலைப்பாகக் கொண்டு பல்வேறு கருத்தரங்குகள், மாநாடுகள், கண்காட்சிகள், பேச்சுக்கள் ஆகியன இடம்பெற்றன. ஊர்வலங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை மாத்திரமன்றி பல்வேறு சமய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறான நடவடிக்கைகளின் சூடு தணியமுன்னரே வடக்கு - கிழக்கில் உக்கிரமோதல்கள் பற்றி - தெற்கில் குண்டுவெடிப்புகள் பற்றி - அச்சுறுத்தலுக்குள்ளான கிராமங்களில் இடம்பெற்ற படுகொலைகள் பற்றி - உடல்கள் சிதறிய சம்பவங்கள் பற்றிய தகவல்கள் வந்துகொண்டிருந்தன. அவ்வாறான வேளைகளில் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்ட பலருக்கு தமது முயற்சிகள் பயனற்றுவிட்டன என்ற உணர்வு உருவானது. அந்தகைய சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மட்டுமன்றி தெற்கில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த எந்தவோர் அரசு மீதும் குற்றங்கள் சுமத்தப்பட்டன.

அன்று நாளாந்தம் நிலவிய அந்த நிலைமையை தற்போது பலர் மறந்துவிட்டனர். அதற்குக் காரணமும் உண்டு. கடந்த ஆறு மாத காலத்தில் நாட்டில் உருவாகிவரும் சமாதான சூழ்நிலையே அதுவாகும்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.மு. ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னர் அதுவரை நிலவிய நிலைமை முற்றிலுமாக மாறிவிட்டது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். இன்று வீதித்தடைகள் இல்லை. சோதனைச்சாவடிகள் இல்லை. தெற்கில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இல்லை. வடக்கு - கிழக்கில் மோதல்கள் இடம்பெறவில்லை. வடக்கில் பொதுமக்கள் கொல்லப்படவில்லை. அரச படையினர் யுத்தத்தில் பலியாகவில்லை. விடுதலைப் புலிகளோ அல்லது வேறு ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்களோ கொல்லப்படவில்லை.

இவ்வாறான சமாதான சூழ்நிலை நாட்டில் உருவாகியிருப்பது நாட்டு மக்களின் பெரும்பாலானோருக்கு திருப்தியை அளித்துள்ளது. இது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டின் பிரதிபலனாகும். இது யுத்தநிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

இருப்பினும் போர்நிறுத்த உடன்பாடு என்பது இறுதியான சமாதான ஒப்பந்தம் அல்ல. இரு தரப்பினருக்கும் இடையில் இறுதித் தீர்வைக் காண்பதற்கான பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கும் திட்டமே அதுவாகும். எனவேதான் யுத்தநிறுத்த உடன்பாடு காரணமாக நாட்டில் உருவாகியுள்ள சமாதான சூழ்நிலையை நிரந்தரத் தீர்வினால் உருவாகும் நிரந்தரச் சமாதானத்துடன் ஒப்பிடமுடியாது. யுத்தநிறுத்த உடன்பாடானது நிரந்தரத் தீர்வின் மூலம் காணப்படும் நிலையான சமாதானம் வரை தொடரப்படவேண்டும். இவ்விடயத்தில் குறிப்பாக யுத்தநிறுத்த உடன்பாட்டில் தொடர்புடைய இரு தரப்பினருக்கும் நேர்மையும் அர்ப்பணிப்பும் தேவை. உடன்பாட்டில் அடங்கியுள்ள விடயங்களை இரு தரப்பினரும் நேர்மையுடன் செயற்படுத்தவேண்டும்.

புரிந்துணர்வு உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருசில நிபந்தனைகள் கூறப்பட்ட விதத்தில் நிறைவேற்றப்படவில்லை என இருதரப்பினரும் ஒருவருக்கொருவர் குற்றஞ்சாட்டுகின்றனர். உடன்பாட்டில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் குறித்த கால எல்லைக்குள் நிறைவேற்றப்படவேண்டும். அவ்வாறு நிறைவேற்றப்படாத சந்தர்ப்பத்தில் இருதரப்பினருக்கும் சந்தேகங்கள் உருவாவதற்கும் அந்தச் சந்தேகங்கள் வளர்வதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன. உடன்பாட்டில் கூறப்பட்ட விடயம் அந்தந்தக் காலஎல்லைகளுக்குள் நிறைவேற்றப்படாவிடின் தமது நிலைமையை உறுதிப்படுத்தும் நோக்கில் இருதரப்பினரும் புறநடவடிக்கைகளில் ஈடுபடும்போது ஒருவரை ஒருவர் சந்தேகக்கண்ணுடன் உற்றுநோக்குவது புதுமையான விடயமல்ல.

அரசாங்கம் திருகோணமலையிலுள்ள எண்ணெய்க்குதங்களை இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்கும்போது - அரசு அமெரிக்காவுடன் புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு வரும்போது - புரிந்துணர்வு உடன்பாட்டில் கூறப்பட்டுள்ளபடி குறிப்பிட்ட இடங்களில் இருந்து அரசு தனது ராணுவ முகாம்களை அகற்றாதபோது - அரசு தங்களுக்கு எதிராக யுத்தத்திற்குத் தயாராகி வருகிறது என விடுதலைப் புலிகள் சந்தேகம் கொள்ளக்கூடும்.

அதேபோலவே விடுதலைப் புலிகள் வடக்கில் பலாத்காரமாகச் சிறுவர்களைக் கடத்திச் சென்று தமது அமைப்பில் சேர்க்கும்போது - வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வரிகளை அறவிடும்போது, ஆயுத தளபாடங்களை நாட்டுக்குள் கொண்டு வரும்போது - அரசும் விடுதலைப் புலிகளைச் சந்தேகக்கண்ணுடன் பார்க்க வாய்ப்புக்கள் உள்ளன.

இவ்விதமாக மறுதரப்பினரிடையே தங்களைப் பற்றிய சந்தேகம் உருவாவதைத் தடுப்பதற்கு இருதரப்பினரும் நேர்மையுடன் செயற்படுவது அவசியமாகும். அவ்வாறு செயற்படாவிடின் இருதரப்பினருக்கும் சமாதானத்தின் மீதுள்ள எதிர்பார்ப்பு படிப்படியாகக் குறைய வாய்ப்புகள் உருவாகும். இவ்வாறான நிலைமை சம்பந்தப்பட்ட இருதரப்பினருக்கும் மாத்திரமன்றி நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் பாதிப்பாக அமையும். மேலும் இது சமாதான முயற்சிகள் அனைத்திற்கும் அச்சுறுத்தலாகவும் அமையும்.

## பரஸ்பரம் சந்தேகங்கள் எழாதிருக்க நேர்மையான செயற்பாடு அவசியம்

*தமிழில்: கஜனி*

இதற்கிடையில் சமாதானத்தை உருவாக்கும் பொறுப்பு அரசையும் விடுதலைப் புலிகளையும் மட்டும் சார்ந்தது எனக் கூறும் சிலர் இருக்கின்றனர். அவ்வாறு கூறுவோர் அனைத்துப் பொறுப்புக்களையும் அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் விட்டுவிட்டு அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சமாதான முயற்சிகளைக் குழப்பியடித்து அரசியல் ஆதாயங்களைத் தேடும் ஒரு சிறு கூட்டமும் உள்ளது. தங்களது தனிப்பட்ட அபிலாஷைகளை நிறைவேற்றுவதே அவர்களது நோக்கமாகும். எனவேதான் அவர்கள் அரசினதும் விடுதலைப் புலிகளினதும் அனைத்துச் செயற்பாடுகளிலும் குற்றம் காணுகின்றனர்.

அரசின் அல்லது விடுதலைப் புலிகளின் தவறான செயல்கள் விமர்சிக்கப்படவேண்டும் என்பது உண்மையே. இருப்பினும் அந்தத் தவறுகளை நேர்சீர்செய்து சமாதான முயற்சிகளை யதார்த்தமாக்கும் நோக்குடனேயே அந்த விமர்சனங்கள் அமைய வேண்டும். நாட்டுமக்கள் அனைவருமே சமாதானத்தை விரும்புகின்றனர் - எதிர்பார்க்கின்றனர் என்பதையும், இந்தச் சமாதானம் ஒரு கட்சிக்கு அல்லது குழுவிற்கு மட்டுமே தேவையானது அல்ல என்பதையும் இந்த விமர்சகர்கள் புரிந்துகொள்ளவேண்டும். அதேபோலவே சமாதான நடவடிக்கை என்பது ஒரு நாளிலோ அல்லது இரண்டு நாள்களிலோ அல்லது ஒருவருடத்திலோ எட்டப்படும் நடவடிக்கை என்ற முடிவுக்கு வரமுடியாது. எமது நாட்டுப் பிரச்சினையை ஒத்த பிரச்சினையைக் கொண்டிருந்த கௌதமாலா நாட்டில் சமாதானப் பேச்சுக்களின்மூலம் நிரந்தரத் தீர்வினை எட்ட ஆறு ஆண்டுகள் எடுத்தன என்பதை நாம் நினைவுகொள்ளவேண்டும்.

எனவே, சமாதான நடவடிக்கைகளின் ஆழம், நீளம் ஆகியவற்றை ஏனையோர்களைப்போலவே அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துகொள்ள வேண்டும். எனவேதான் இருதரப்பினரும் மேற்கொள்ள வேண்டிய இரு முக்கியமான விடயங்கள் உள்ளன. சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளப் பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு புரிந்துணர்வு உடன்பாட்டை உள்ளவாறு நிறைவேற்ற வேண்டும். இது முதலாவது நடவடிக்கையாகும். சமாதானப் பேச்சுக்களில் சேர்க்கப்படவேண்டிய விடயங்களைத் தீர்மானிப்பதும் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான கால எல்லையைத் தீர்மானிப்பதும் இரண்டாவது நடவடிக்கையாகும். இந்த இரு விடயங்களையும் இருதரப்பினரும் நேர்மையுடன் நிறைவேற்றுவார்களாயின் சமாதானம் தொடர்பாக தறபோது உருவாகியுள்ள எதிர்பார்ப்புகளை யதார்த்தமாக்குவது ஒரு கடினமான விடயமல்ல. ★



பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 'கம்பராமாயணக் காட்சிகள்-II' நூலின் அறிமுகவிழா அண்மையில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

நூலின் முதற்பிரதியை மயிலங்கூடலூர் பி.நடராஜனிடமிருந்து சைவப் புலவர் சு.செல்லத்துரை பெற்றுக்கொள்வதை முதலாவது படத்திலும், கவிஞர் சோ.பத்மநாதன், ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் ஆகியோர் முறையே விமர்சன உரை, பதிலுரை நிகழ்த்துவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (எ)

# கிழக்கில் பொது இடங்களிலிருந்து படையினர் வெளியேறுகின்றனர்!

மட்டக்களப்பு,ஜூலை8:

அம்பாறை, மட்டக்களப்பு பிரதேச பாடசாலைகள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களில் இருந்து படையினர் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

அம்பாறை, மாவட்டத்திலுள்ள நான்கு பாடசாலைகளில் இருந்து படையினர் முற்றாக வெளியேறியுள்ளனர். எனினும் அப்பகுதியிலுள்ள ஆறு சிங்களப் பாடசாலைகளில் படையினர் தொடர்ந்தும் தங்கியுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் ஏழு கோயில்களில் முகாமிட்டிருந்த படையினர், தற்போது கண்ணகிபுரம் முருகன் ஆலயத்தில் மட்டுமே தங்கியுள்ளனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொதுக் கட்டடங்கள் மற்றும் பொதுமக்களின் வீடுகளில் படையினர் தொடர்ந்தும் முகாமிட்டுள்ளனர்.

இதற்கிடையில் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள கேணல் எஸ்.ஆர் லமிந்திர தலைமையிலான குழுவொன்று மட்டு. - அம்பாறை பகுதிகளுக்குச் சென்று படையினர் தங்கியுள்ள பொதுக் கட்டடங்களினதும் வீடுகளினதும் விபரங்களைச் சேகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-9)

## கும்பாபிஷேகம் நடத்திவைக்க
# வீரசைவக்குருமார் ஜேர்மனி பயணம்!

ஜேர்மனியின் ஹம் நகரில் உள்ள ஸ்ரீ காமாட்சியம்பாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்திவைப்பதற்கென இலங்கையில் இருந்து ஒன்பது வீரசைவக்குருமார் ஜேர்மனி பயணமாகியுள்ளனர்.

சிவஸ்ரீ நடிப்புதேவக் குருக்கள் (கொழும்புத்துறை), சிவஸ்ரீ ரே.உருத்திரபுரீஸ்வரக்குருக்கள் (உருத்திரபுரம்), சிவஸ்ரீ இ.பத்மநாதக் குருக்கள் (திருமலை), சிவஸ்ரீ ம.காயாரோகண சிவக்குருக்கள் (யாழ்ப்பாணம்), சிவஸ்ரீ இ.கதிரவேலுக்குருக்கள் (மயிலங்காடு).

சிவஸ்ரீ சி.கதிர்காமக் குருக்கள் (கோண்டாவில்), சிவஸ்ரீ செ.வைரவநாதக் குருக்கள் (உரும்பிராய்), சிவஸ்ரீ அ.மதிவதனக் குருக்கள் (ஸ்ரீமலை), சிவஸ்ரீ வே.பேரின்பக் குருக்கள் (யாழ்ப்பாணம்) ஆகியோரே இவ்வாறு ஜேர்மனி பயணமாகியுள்ளனர்.

மேற்படி ஆலயக் கும்பாபிஷேக நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. (எ)

# குடாநாட்டில் வீதி விபத்துக்களைத் தடுக்க பொது அமைப்புகளின் ஈடுபாடு அவசியம்!

## பதில் நீதிவான் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை8:

குடாநாட்டில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைத் தடுக்க பொது அமைப்புக்களின் ஈடுபாடும், நடவடிக்கைகளும் அவசியம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ்.மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு (விகடகவி).

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் புதிய உத்தியோகத்தர்கள் பதவியேற்பு நிகழ்வும் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு அங்கு மேலும் கூறியதாவது:-

'யாழ் குடாநாட்டில் தற்போது வாகன நெருக்கடி அதிகமாக ஏற்பட்டுள்ளது. அதனால் வீதிகளில் ஏராளமான விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

'வீதிகள் அகலம் போதாமையாலும் இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை பெரும்பாலானவர்கள் வீதி ஒழுங்குகளை சரியாகப் பேணாமையாலுமே விபத்துக்கள் பெருமளவில் ஏற்படுகின்றன.

'இன்றைய இளைஞர் யுவதிகள் மூவர், நால்வராக கூட்டமாக சைக்கிள்களில் 'சமாந்தர சவாரி' செய்கின்றனர். இதனால் ஏற்படக்கூடிய விபத்துக்கள் மற்றும் உயிராபத்துக்களைக் கருத்தில் கொண்டு வீதி ஒழுங்குகளைப் பேண இவர்கள் முன்வரவேண்டும்.

"அத்துடன் இவ்விடயத்தை லயன்ஸ் கழகம் போன்ற பொது அமைப்புக்களும் கவனத்தில் எடுத்து பாடசாலை மாணவர்கள் மத்தியில் வீதி விதிமுறைகளை விளக்கி பாடசாலைகள் தோறும் கருத்தரங்குகள் நடத்துவதற்கும் -

'முக்கியமான வீதிகள், சந்திகளில் வீதி ஒழுங்குகளைக் காட்டும் குறியீட்டுப் பலகைகளை அமைப்பதற்கும் பொது அமைப்புக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

'அத்துடன் இந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்கும் விடயத்தில் நீதிமன்றங்கள் மற்றும் பொலீஸார் கடுமையான போக்கை கையாள வேண்டியதும் அவசியமாகும்' என்றார்.

இந்த நிகழ்வில் நல்லூர் லயன்ஸ் கழக முன்னாள் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் ஏனைய லயன்ஸ் கழகங்களைச் சேர்ந்த பிரமுகர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-4)

**YOGAS TRAVELS (ஞானம்ஸ்)**

**யோகாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்** 18A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

**யாழ்ப்பாணம் - கொழும்பு வான் சேவை**

பயணிகளே!

தீவுப்பகுதிப் பிரயாணிகளின் நலன்கருதி.......

நேரிலோ அல்லது தொலைபேசி மூலமோ பயணங்களுக்கான ஆசனங்களைப் பதிவுசெய்யும் பயணிகளை அவரவர் விரும்புகின்ற இடத்தில் ஏற்றியும் இறக்கியும் சேவையாற்ற முன்வந்துள்ளனர்.

**யோகாஸ் ரவல்ஸ் (ஞானம்ஸ்)** (C/22836)

*யாழ்ப்பாணத்தில்:*
18A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
விநாயகர் ஸ்ரோர்ஸ்,
*நவாலி கிழக்கு,*
*மானிப்பாய்.*
துர்க்கா ஸ்ரோர்ஸ் (ஸ்ரீ)
*மாவடிச் சந்தி,*
*வட்டுக்கோட்டை.*

ஸ்ரீமுருகன்
கொமினிகேஷன்
303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021- 2670,
3588
Fax: 021-3214.

*கொழும்பில்:*
262/7 அழுத் மாவத்தை,
கொழும்பு - 15
T.P.526404, 526405
9,47th LANE, Col.-6
T.P.074-519759,
506286, 594835.
சந்திராஸ் கொமினிகேஷன்
405, காலி வீதி, கொழும்பு - 8
T.P.:507619



**JOHN INSTITUTE**
**ENGLISH CLASSES**

* *Spoken English with Grammar*
* க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான *General English*
* க.பொ.த. (சா/த) வினாவிடை.
* விசேட வகுப்புகள் (இரவு, பகல்)
* அனைத்து தர பாடசாலை மாணவர்களுக்குமான Text Books(Grade 3 - Grade 11)

ஆரம்பம்: 2002.07.10(புதன்கிழமை) at: 3.00 p.m. (5698)

**JOHN INSTITUTE** மணல் ஒழுங்கை, பருத்தித்துறை.


## யா/உசன் இராமநாதன் ம.வி.

## நூலகத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும்

*இடம்* : பாடசாலை மண்டபம்
*நாள்* : நாளை (09.07.2002) செவ்வாய்க்கிழமை
*நேரம்* : காலை 9.30 மணி (புதிய நேரம்)

*பெற்றோர், பழைய மாணவர், ஆசிரியர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்.

(5651)

## சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B

## உரும்பிராய் லயன்ஸ் கழகம்

## இலவச கண்ணாடி பரிசோதித்து வழங்கல்

*காலம்:* இன்று [08.07.2002] திங்கட்கிழமை காலை 9 மணி.
*இடம்:* உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆராதனை மண்டபம்

*பரிசோதனையாளர்:* **எரிக் கணேஸ் ஸ்தாபனத்தார்**

கொழும்பு மத்திய நகர லயன்ஸ் கழகத்தினர், இச் சேவையை எம்முடன் இணைந்து வசதிகுறைந்தவர்களுக்கு வழங்குகின்றனர். மக்கள் நேரகாலத்துடன் திரண்டுவந்து பயன்பெறுக.

(C/22833) உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினர்.

உ

கட்டுவன் தெற்கு - மேற்கு ஏழாலை வடக்கு
அருள்மிகு முனியப்பர் ஆலய

## மஹா கும்பாபிஷேக விழா

இன்று (08.07.2002) திங்கட்கிழமை பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும்.

10.07.2002 புதன்கிழமை காலை 10 மணிமுதல் மாலை 3.00 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் நடைபெறும்.

11.07.2002 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு தூபி அபிஷேகம், நண்பகல் 12.00 மணிக்கு மஹா கும்பாபிஷேகம்.

தொடர்ந்து மஹா அபிஷேகமும் அன்னதானமும் இடம்பெறும்.

*பிரதமகுரு: சிவஸ்ரீ தியாக.சிகங்காதரக் குருக்கள்*
(புன்னாலைக்கட்டுவன்)

*கட்டுவன் மத்தி, ஏழாலை*

மூ.த.மூர்த்தி
*அறங்காவலர்*

(5685)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட
17ஆம் அணி மாணவனாகிய

### நவரட்ணராசா ரவிசங்கர்

அவர்கள் நேற்று (07.07.2002) ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிப்பதுடன் அவரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

24ஆம் அணி,
மருத்துவபீடம்.

(5700)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை8

அல்வாய வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளைமறுதினம் 10ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி வேட்டை, சப்பறத்திருவிழாவும், 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், 24ஆம் திகதி சமுத்திர தீர்த்தமும் நடைபெறும்.

உற்சவதினங்களில் தினமும் மாலை 5 மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எ)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூலை8

வட்டுக்கோட்டை கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த சனியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறும். உற்சவ காலத்தில் தினமும் "தத்துவ கீதை" என்னும் பொருளில் கமலானந்தன் சொற்பொழிவாற்றுவார்.

☆ ☆ ☆

இணுவில்,ஜூலை8

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறுகிறது.

திருவிழாக் காலத்தில் தினமும் மாலை 7.00 மணிக்கு வைரவர் பெருமை கூறும் "சிவமகா புராணம்" எனும் தலைப்பில் நா.கலாதரசர்மா சொற்பொழிவாற்றுவார். (ஒ-ரி)

☆ ☆ ☆

கோப்பாய்,ஜூலை8

கோண்டாவில் கிழக்கு ஆசிமடம் அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த சனியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தேர் உற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா மறுநாளும் நடைபெறும். (ஒ-72)

☆ ☆ ☆

கோப்பாய்,ஜூலை8

ஆவரங்கால் நடராஜ ராமலிங்க சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும். உற்சவ காலங்களில் தினமும் மாலை 5.00 மணிக்கு ஆசிரியர் ச.லலீசன் தெய்வீக சொற்பொழிவாற்றுவார். (ஒ-72)

☆ ☆ ☆

காரைநகர்,ஜூலை8

காரைநகர் பத்தர்கேணி வன்மீக விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றன. நாளை செவ்வாய்க்கிழமை காலைமுதல் பத்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

வியாழக்கிழமை முற்பகல் 10.36 தொடக்கம் 12.22 மணிவரை உள்ள சுபவேளையில் நடைபெறும் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ப.கோபால கிருஷ்ணஐயர் ஆசியுரையும், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவுப் பகுதிக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோர் வாழ்த்துரையும் வழங்குவர். (எ-73)

☆ ☆ ☆

காரைநகர், களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவில் வருடாந்த மஹோற்சவத்தில் தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8மணிக்கும் தீர்த்தத் திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கும் நடைபெறவுள்ளன. (எ-73)


☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூலை8

நுணாவிலை பூதேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த சனியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 15ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ)

## ஓராண்டின் நினைவில்



தோற்றம்
01
-
02
-
1938

மறைவு
19
-
06
-
2001

## அமரர் பொன்.சபாபதி

*(முன்னாள் கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்டம், வன்னி இணைப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு)*

திதி: 08-07-2002

*கல்வி வளர்ச்சி ஒன்றே உங்கள் இலட்சியமாயிருந்தீர்கள்!*
*அதற்காக, அயராது உழைத்தீர்கள்! அந்த*
*இலட்சியத்துடனேயே மறைந்தீர்கள்!*
*மறைந்தாலும் மறையாமல் எங்கள் மனங்களில் நீங்கள்!*
*உங்கள் எண்ணங்களை சுமந்தவண்ணம் நாங்கள்!*

உங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

(5707) உங்களின் மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி செல்வி ப.சசிகலா அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி பரமகுலசிங்கம்

அவர்கள் 06.07.2002 சனிக்கிழமை அன்று இறைபதம் எய்தியமையையிட்டு நாம் ஆழ்ந்த துயரமடைந்ததுடன் அவரின் பிரிவால் துயருறும் எமது சக மாணவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

19ஆம் அணி மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம். (5691) மருத்துவபீடம்.


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட
17ஆம் அணி மாணவனாகிய

### நவரட்ணராசா ரவிசங்கர்

அவர்கள் நேற்று (07.07.2002) ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிப்பதுடன், அவரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.


19ஆம் அணி,
மருத்துவபீடம்.

(5702)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சண்முகபூபதி இராஜேந்திரம்

புங்குடுதீவைச் சேர்ந்த திருமதி சண்முகபூபதி இராஜேந்திரம் அவர்கள் 01.07.2002 திங்கட்கிழமை பரீஸ் நகரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேந்திரம் (விதானையார்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து உடையார் - செல்லம்மா தம்பதியினரின் மருமகளும் குமாரவேலு - மகேஸ்வரி தம்பதியினரின் மகளும் ரஞ்சிதமலரின் சகோதரியும் கௌரி (கொழும்பு), சுரேந்திரன் (லண்டன்), மகேந்திரன் (பிரான்ஸ்), மகேஸ்வரன் (யாழ்), கௌசலா (பரீஸ்), பிறேமா (கனடா), நிர்மலா (கனடா), ரவீந்திரன் (பிரான்ஸ்), சர்வேந்திரன் (கனடா), பாலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் தாயாரும் இலட்சுமனராசா, சாரதா, புனிதவதி, கௌரி, சிவஞானசுந்தரம், இராஜேஸ்வரன், ரகுராம், வனஜா, வாசுகி, ஸ்ரீவதனா ஆகியோரின் மாமியாரும் சுபானா, லவன், சுசீந்திரன், செந்தூரன், சுஜிதா, கபிலன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2002) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*63, செட்டித்தெரு ஒழுங்கை,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*
**T.P.: 021-3430**
*பிரான்ஸ்*
**T.P.: 00331-70001542**

*தகவல்:*
இ.மகேஸ்வரன்
(மகன்)

(5697)

### திருமதி தங்கலட்சுமி பாலதுரை

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட உதயா & CO. (Pvt) Ltd. இன் பங்காளரும் இளைப்பாறிய ஆசிரியையுமான திருமதி தங்கலட்சுமி பாலதுரை நேற்றுமுன்தினம் (06.07.2002) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார்M.P.பாலதுரை (நிர்வாகி, உதயா & CO. (Pvt) Ltd.)யின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2002) திங்கட்கிழமை இல.44, ஹேக்கித்த வீதி, வத்தளையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.4.30 மணியளவில் வத்தளை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*44,ஹேக்கித்த வீதி, வத்தளை.*
**T.P:931340, 930759**

(C-22837)

*தகவல்:*
திரு.பாலதுரையும்
பிள்ளைகளும்.

# அலை பாய்ந்திடும் மனதினை அடக்கி உன்னதமடைவதே மனிதர்க்கு மாண்பு!

**மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் எதிர்வரும் 12,13,14ஆம் திகதிகளில் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தின் வடபிராந்திய இளைஞர் பிரிவு 'மனித உன்னதம்' என்ற தொனிப்பொருளில் கண் காட்சியொன்றை நடத்துகிறது. அதனையொட்டி வெளியாகும் கட்டுரையின் ஒரு பகுதி இது.**

**வி**ஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் ஆகியவை கடுகதி வேகத்தில் அபிவிருத்தியடைந்துவரும் இக்காலத்தில், எச்செய்கையிலும் குறிமுனைப்பு (Precision), பூரணம் (Prebection), உன்னதம் (excelence) ஆகியவற்றில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது.

மனிதன் தன் படைப்பில் குறிமுனைப்பு, பூரணம், உன்னதம் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் அதே வேளை, தனது உன்னத நிலையிலோ வாழ்க்கையின் நோக்கிலோ பரிபூரண நிலையிலோ கவனம் செலுத்துவதில்லை. இப்பிற்போக்கில் இருந்து மனிதனைத் திருப்பவே பல மகான்கள் காலத்துக்குக் காலம் தோன்றி வழிகாட்டியுள்ளார்கள்.

**மனிதம்**

மனிதன் என்பவன் கலங்களின் சேர்க்கையால் இழையங்கள், அவயவங்கள், தொகுதிகள் என்பவற்றுடன் மனமும் சேர்ந்து இயங்கும் ஓர் அமைப்பே என்று விஞ்ஞானம் கூறுகிறது. இந்த அதிசயமானதும், நுணமையானதும், பிரமாதமானதுமான மனித அமைப்பின் முன் அடிபணிந்து நிற்கிறது விஞ்ஞானம். இந்த மர்மமான படைப்பின் முழு விளக்கத்தையும் விஞ்ஞானத்திற்கு அப்பாலுள்ள ஆன்மீக விழிப்புணர்வில்தான் பெறமுடியும்.

வேத, சாஸ்திரங்கள் மனிதன் பஞ்சபூதச் சேர்க்கையென்றும், ஐந்து கோசங்களினால் ஆனவன் என்றும், உடல், உளம், ஆன்மா ஆகிய மூன்றாலும் இயங்கும் ஒரு சிருஷ்டியென்றும் கூறுகின்றன. எனவே, உடல், உளம், ஆன்மா (மனச்சாட்சி) ஆகிய மூன்றின் ஆரோக்கியத்தைப் பேணுவதன் மூலம் மனித உன்னதத்தை அடையலாம்.

**ஆரோக்கியம்**

அளவான - போஷாக்கான உணவு, தேக சுத்தம், தேக அப்பியாசம் ஆகியவற்றின் முக்கியத்துவம் யாவருக்கும் தெரிந்ததே.

இவற்றுடன் உணவில் சேர்ந்திருக்கும் அதிர்வலைகள் எவ்வளவு தூரம் மனதைப் பாதிக்கும் என்பது பலருக்குந் தெரியாமலிருக்கலாம்.

தானியத்தைப் பயிரிட்டவன், இறைச்சிக்காகக் கொல்லப்பட்ட பிராணி, உணவு தயாரிப்பவர், உணவைப் பரிமாறுபவர் ஆகிய எல்லோரிடமிருந்தும் அதிர்வலைகள் உணவில் கலக்கின்றன.

இதைத்தான் சான்றோர்கள் பாகசுத்தி, பதார்த்தசுத்தி, பாத்திரசுத்தி, பரிமாறல்சுத்தியென்று விளக்கியுள்ளார்கள். விரும்பத்தகாத அதிர்வலைகளைச் செயலிழக்கச் செய்வதற்காகவே, ஒருவர் உணவை உண்ண முன்பு, தெய்வத்திற்கு அர்ப்பணித்தல், பிரார்த்தித்தல், நன்றி கூறல் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று மகான்கள் கூறியுள்ளார்கள்.

தற்காலத்தில் உணவு அளவுக்கு மீறி உண்பதாலேயே பல நோய்கள் உண்டாகின்றன. பகவான் சத்திய சாயி பாபா:

மூன்று நேரம் உண்பவன் ரோகி
இரண்டு நேரம் உண்பவன் போகி
ஒரு நேரம் உண்பவன் யோகி

என்றும் -


அவசரம் (Hurry), மச்சஞ்சலம்,
அதிருசியான கறி (Curry) ஆகியவையே இதய நோய்க்குக் காரணம்

என்றும் -

வயிற்றின் மூன்றில் ஒரு பகுதியை நீராலும் மூன்றில் ஒரு பகுதியை உணவாலும் நிரப்பி மிகுதியான பகுதியை வெற்றிடமாக விடுவதே ஆரோக்கியமான உணவு உணணும் முறை என்றும் கூறியுள்ளார்.

கடைகளில் விற்கும் 'திடீர் உணவு' வகைகளை உண்பதாலும் நோய்கள் உண்டாகின்றன. வீட்டில் சமையல் செய்யும் பொழுதும், உணவைப் பரிமாறும் பொழுதும், உண்ணும் பொழுதும் இடைவிடாது இறை நாமத்தை உச்சரித்தால் உண்ணும் உணவு பரிசுத்தமாக்கப்படுகின்றது.

உடற்பயிற்சிகளும் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க மிகவும் அவசியம். தேகாப்பியாசம் இரண்டு வகைப்படும். அதில் ஒரு வகை, உடலைப் பலமடையச்செய்வதோடு தசைகளைப் பருமனடையச் செய்யும் (உதாரணம்: பாரம் தூக்குதல், சுருள் விசை இழுத்தல் ஆகியன) மற்றது தேகத்தை லேசாகவும்




படம் 1

வளையக்கூடியதாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும். (உதாரணம் யோகாசனம், நடனம் ஆகியவை.)

தேகத்தின் மீது அதிகபற்று வைக்கவும் கூடாது அதே நேரத்தில், தேகத்தை தெய்வம் இருக்கும் ஆலயம் என்று பராமரிக்கவும் வேண்டும். ஆகவே தேகத்தைத் தினந்தோறும் கழுவிச் சுத்தமாக வைத்துக்கொள்ளுவதுடன் சுத்தமான ஆடைகளையும் அணியவேண்டும்.

பகவான் சத்திய சாயிபாபா, தனது மாணவர்களையும், ஆசிரியர்களையும், நிர்வாகிகளையும், தொண்டர்களையும் எப்பொழுதும் சுத்தமான வெண்ணிற ஆடைகளையே அணியும்படி அறிவுறுத்தியுள்ளார்.

**மனத்தின் ஆரோக்கியம்**

உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பது அவ்வளவு பிரச்சினையாக இல்லாவிட்டாலும், எமது மனதை உன்னத நிலையில் வைத்திருப்பதற்கு விடாமுயற்சியும் ஆண்டவனின கிருபையும் தேவை. நாம் இருக்கும் நிலை எதுவானாலும் அதற்கு மனமே காரணம்.

மனம் ஒரு சூக்சும நிலையானது. அது எண்ணங்களின் கூட்டென்றும், ஆசைகளின் கூட்டென்றும், ஆத்மாவின் பிரதிபலிப்பென்றும் விளக்கப்பட்டுள்ளது. மனம், உலகிலுள்ள எல்லா சக்திகளுக்கும் மேலானது. மனம் உறங்கினால் (ஆழ்ந்த நித்திரை) உலகமே இல்லை. கனவு நிலையில் எதை எதையோயெல்லாம் படைத்து அனுபவிக்கிறது. இடம் விட்டு இடம் பாய்வதில், மனதின் வேகம், ஒளியின் வேகத்தை விடப் பன்மடங்கு அதிகமாகும். மனோ சக்தியினால் எதையும் சாதிக்கலாம். ஞானிகள் பஞ்சபூதங்களைக் கூட மனோவலிமையால் கட்டுப்படுத்தியுள்ளார்கள். சுருங்கக்கூறின் மனம் தான் எல்லாவற்றிற்கும் காரணம். இப்படிச் சக்திவாய்ந்த மனம் எம்மைக் கீழ் நிலைக்கும் இழுத்துச் செல்லலாம்; அல்லது உன்னதமான மேல் நிலைக்கும் எழுப்பிவிடலாம்.

'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்றாலும், இதைச் செய்வது மிகவும் கடினம். நாம் ஒரு பொருளையோ அல்லது நிகழ்வையோ உள்ளபடி அறியாமலிருப்பதற்கு மனதில் இருக்கும் குறைபாடுகளே காரணம். வேதாகமங்களின்படி, எமது மனம் மூன்று குறைபாடுகளால் சரியாக இயங்குவதில்லை. அவையாவன:-

மாலா அல்லது லாசனாக்கள் (Tendencies):

முற்பிறப்பிலும், இப்பிறப்பிலும் சேர்க்கப்பட்ட விருப்பு வெறுப்புகள் எமது முடிவைப் பாதிக்கின்றன. இதைத் தூசி படிந்த, முகம் பார்க்கும் கண்ணாடிக்கு ஒப்பிடலாம். தூசி இருப்பதால் கண்ணாடியில் தெரியும் பிம்பத்தைத் தெளிவாகக் காட்டாது.

விக்சேப அல்லது அலையும் மனம் (Wavering mind):

மனம் ஒரு குரங்கு. அது ஓரிடத்தில் அமைதியாகக் குவிந்து நிற்பதில்லை. இதை ஊடிக்கொண்டிருக்கும் கண்ணாடிக்கு ஒப்பிடுவார்கள். கண்ணாடியின் அசைவு, பிம்பத்தைக் கூர்ந்து கவனிக்க விடாது.

ஆவரண அல்லது அஞ்ஞானம் (Ignorance or Illusion):

அஞ்ஞானமாகிய இருள் மனதைச் சூழ்ந்துள்ளது. இதனால், உலகம், மனிதன், ஆத்மா என்ற மூன்றிற்குமுள்ள தொடர்பு விளங்குவதில்லை. எது நிரந்தரம், எது நிரந்தரமற்றது என்பது தெரிவதில்லை. இதனால் உண்மையான பொருளைத் தேடாது, நிழலின் பின் செல்கின்றோம். ஆத்மா எங்கும் வியாபித்துள்ளதை அறிய முடியவில்லை. காரண காரியத்தைப் பற்றிய விளக்கமில்லை. நன்மை, தீமை, குறைநிறை எல்லாம் சேர்ந்ததே உலகமென்று தெரியாது. இதைத் திரையினால் மூடப்பட்ட கண்ணாடிக்கு ஒப்பிடுவார்கள். திரை நீங்கியதும் பிம்பம் தெளிவாகத் தெரியும்.


**மனம் இயங்கும் முறைகள்**

எமது மனம் இரண்டு முறையில் இயங்குகிறது.

முறை ஒன்றில்(படம் 1ஐப் பார்க்கவும்) மனம் ஐம்புலன்களின் ஆதிக்கத்தில் இயங்குவதுடன், புத்தியையும் அதன்கீழ் வைத்துள்ளது. மனசாட்சி பரிணமிப்பதற்கு வாய்ப்பேயில்லை. இம்முறையில்தான் அநேகருடைய மனம் இயங்குகிறது. ஐம்புலன்களின் இச்சைப்படி, தேக சௌகரியம், மண், பொன், பெண், பதவி, அந்தஸ்து ஆகியவற்றில் மோகம்கொண்டு வாழ்கின்றோம். இதனால்தான் புகைத்தல், மது அருந்துதல், போதைவஸ்துப் பாவித்தல், காமம் போன்ற சிற்றின்பங்களில் பொழுதைப் போக்குகின்றோம்.

முறை இரண்டில்(படம் 2ஐப் பார்க்கவும்) மனசாட்சியின் அதிக்கத்தின் கீழே புத்தியும், அதன் கீழே மனமும், அதன் கீழ் ஐம்புலன்கள் மிகவும் அடக்கத்துடன் இயங்குகின்றன. இது தான் உன்னத நிலை. இந்நிலையில், காமம், குரோதம், மதம், மாத்சரியம், மமதை எல்லாம் அடங்கி, சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை ஆகிய மனித மேம்பாட்டுக் குணங்கள் தங்கு தடையின்றி மிளிர்கின்றன.

முறை ஒன்றில் இயங்கும் மனம்,




படம் 2

ஐம்புலன்களின் வரையறையினால் பாதிக்கப்படுகிறது. முறை இரண்டில் இயங்கும் மனம் ஐம்புலன்களைக் கடந்து செயற்படுகிறது. முறை ஒன்றில், மனம் பாச பந்தங்களில் கட்டுண்டு பிறப்பு, இறப்பு சக்கரத்தில் சிக்கிக்கொள்கிறது.

முறை இரண்டில் மனம் பாசங்களிலிருந்து விடுபட்டு முத்திநிலையை அடையச் செயற்படுகின்றது. இதைத் தான் பகவான் சத்தியசாயி பாபா திறப்பும் பூட்டும் மூலமாக விளக்கியுள்ளார்.

*'திறப்பு என்ற மனம் சரியான திசையில் (ஆண்டவனை நோக்கி) திரும்பினால் பூட்டுத் திறக்கப்படும். அதே திறப்பு எதிர்த்திசையில் (உலகப்பற்று) திரும்பினால் பூட்டு பூட்டப்படுகிறது. ஒரே திறப்பு திருப்பப்படும் திசையைப் பொறுத்து பூட்டு திறக்கப்படுகிறது அல்லது பூட்டப்படுகிறது.'*

மனம் சரியான முறையில் செயற்படாவிட்டால், அபிப்பிராயம், விளக்கம், முடிவு, செயற்பாடுகள் எல்லாம் பிழைத்துவிடும்.

உளவள நிபுணர்கள், நடத்தைத் திருத்தம் (Behaviour Correction), உளவள பகுத்தாய்வு (Psychoanalysis) ஆகிய படிகளிலிருந்து ஆன்மீக உளவளம் (Spiritual Psychology) என்ற படிக்கு ஏறியுள்ளார்கள். மஸ்லோவுக்குப் (Maslow) பின்வந்த உளவள நிபுணர்கள் உளவளத்திற்கு ஆன்மீகம் மிகவும் முக்கியமென்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

மனித இனம் படிப்படியாக, தேகத் தேவை, உத்தரவாதத் தேவை, வாசஸ்தல தேவை, தன்மதிப்பைத் தேவை ஆகியன பூர்த்தியானதும் தன்னை அறிவதில் நோக்கம் கொள்கிறது என்ற கொள்கையை மாஸ்கோஸ் பிரகடனம் செய்துள்ளார்.

*(தொடரும்)*

**டாக்டர் இ.கனேசமூர்த்தி**
இளைஞர் பிரிவு இணைப்பாளர்
ஸ்ரீசத்தியசாயி சேவா நிறுவனம்

# தெய்வமணங்கமழும் பாடல்கள் இறையருளின்பால் எம்மை ஈர்ப்பன!

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை8

தெய்வமணங்கமழும் பாடல்கள் இறையருளின்பால் எம்மை ஈர்க்கக் கூடியவை.

- இவ்வாறு தெரிவித்தார் வல்லை முத்துமாரி அம்மன் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர்.

வல்வெட்டியூர் கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பி இயற்றிய 'விநாயகர் தோத்திரப் பாமலர்களும் பிள்ளையார் புராண வசனச் சுருக்கமும்' என்ற நூலின் வெளியீட்டு விழா அண்மையில் வல்வெட்டி வேவில் விக்னேசுவரர் ஆலயத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்:-

இறைவனுக்குப் பூமாலை சாத்தியும், பாமாலை ஓதியும் வழிபடலாம். பூமாலை விரைவில் வாடிவிடும். பாமாலை நெடுங்காலம் நிலைத்து நின்று பக்திப் பரவசத்தைத் தூரத்தக்கது. சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரை ஆட்கொள்ளும்பொழுது, 'நமக்கு அர்ச்சனைப் பாட்டே' என்று கூறிப் 'பித்தா' என்றே தொடங்கிப் பாடும்படி பணித்தார். எனவே, வழிபாட்டில் பக்திப் பாடல்களை ஓதுவது இறையருளை நம்பால் ஈர்க்கும் சிறந்த சாதனையாகும் - என்றார்.

வாழ்த்துரை வழங்கிய தென்கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் க.இரகுபரன் தமதுரையில்-

ஆலயங்களின் தல புராணங்கள் வெளிவருவது ஆலயங்களின் மகிமையை வருங்காலச் சந்ததியினரும் உணர்ந்து பக்திவழி ஒழுக வைக்கும் சாதனமாக அமையும். அவ்வழியில் நூலாசிரியர் முன்பு வெளியிட்ட இவ்வாலயத் தல புராணம் மிகவும் உதவுவதாகும். விநாயகப் பெருமானின் அருட்டிறனை யாவரும் ஓதி அப்பெருமானின் அருளை இலகுவில் பெறும் வழியில் இத்தோத்திரப் பாமலர்களை ஆக்கித் தந்தமை எல்லோருக்கும் பயன்தருவதாகும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதன் தமது மதிப்பீட்டுரையில்-

இந்நூலை நாம் ஓதும்போது பெரியபுராண நூல் எம்முன் கொண்டு வரப்படுகிறது.

*'மண்ணுலகும் பொன்னுலகும்*
*வாழ மறைவாழத்*
*தண்ணிகரில் செய்யதமிழ்*
*தரணியெங்கும் பரவ*
*ஐந்துகர மூன்றுவிழி*
*இரண்டு செவி நால்வாய்*
*விந்தைமிகு வேவிலமர்*
*விநாயகனைப் பணிவோம்'*

என்பதுடன் 'வானுலகும் மண்ணுலகும் வாழ' என்பதை நோக்கும்போது புலனாகிறது. இஃது இக்கவிஞர் பெரிய புராணத்திலும் மிகுந்த ஈடுபாடுடையவர் என்பதைத் தெளிவாக்குகிறது - என்றார்.

நூலாசிரியர் ஆ.கதிர்காமத்தம்பி மேற்படி ஆலயத்தின் ஆதீன கர்த்தாக்களால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். திருமதி மா.கதிர்காமத்தம்பி நன்றியுரை கூறினார். (எ)



நூல்வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பியிடமிருந்து நூலின் முதற்பிரதியை சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக் குருக்கள் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (எ)

## பொதுக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை8

யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-4)

☆ ☆ ☆

யாழ்பல்கலைக்கழக நுண்கலைக் கழகப் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மருதனார்மடம் நுண்கலைக்கழக நடேசர் அரங்கில் நடைபெறவுள்ளது. (ஒ-4)

☆ ☆ ☆

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் வாசீசர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-4)

# 7ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
1944
-
04
-
13

இறப்பு
1995
-
07
-
09

## அமரர் கனகசிங்கம் நாராயணசிங்கம்

*(ஸ்ருடியோ [illegible] சித்ரா உரிமையாளர்)*

[illegible] 2002

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கரைப்பிட்டி [illegible] கரைப் பிரார்த்திக்கின்றோம்.*

*அராலி தெற்கு, அராலி.* (5552) - குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி மாணிக்கவேலு காந்தாமணி

**(சின்னவா - வல்வெட்டித்துறை)**

எமது இல்லத்தரசியான திருமதி மா.காந்தாமணி அவர்கள் 08.06.2002 இல் இறைவனடி எய்தியமையையிட்டு 31ஆம் நாளாகிய இன்று (08.07.2002) திங்கட்கிழமை அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு திருச்சியில் அவரது இல்லத்தில் நடைபெறுகிறது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
*M.மாணிக்கவேலு,* - குடும்பத்தினர்.
*5/19, ஆறாவது குறுக்குத்தெரு,*
*8ஆவது பிரதான வீதி, ஸ்ரீநிவாச நகர் - தெற்கு,*
*திருச்சி 17, தென்இந்தியா.*
*தொலைபேசி: 0091-431-782267.* (5656)

# சீனா - இலங்கை இடையே ஒப்பந்தம்

கொழும்பு,ஜூலை8

[illegible] மேம்படுத்தும் வகையில் எதிர்வரும் நவம்பர் மாதம் சீனாவுடன் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக உல்லாச பயணத்துறை மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அண்மையில் சர்வதேச பயண சேவைகள் தொடர்பான சீன முகவர்களைச் சந்தித்த பின்னர் அமைச்சர் காமினி லொக்குகே, செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு எதிர்வரும் நவம்பர் மாதம் அமைச்சர் சீனா செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது. (ஒ-4)

# கொக்குவிலில் கண்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,ஜூலை8

கொக்குவில் லயன்ஸ் கழகமும் கொழும்பு மத்திய நகர லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாமும் கண்ணாடி வழங்கல் நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க சிறுவர் நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-4)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால்
அவியல், சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
*சகல வியாதிகளையும்*
*குணப்படுத்துவார்.*

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி எண்: 2459* (5659)


# கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்

## திருமதி கௌரி அன்றூ

அவர்களின் அன்புத் தாயார்


## திருமதி இரணசிங்கம் தவமணி

அவர்கள் 03.07.2002 அன்று இந்தியாவில் காலமானதையிட்டு அவரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சு.வை.அதிகாரி பணிமனை,** **சுகாதார வைத்திய அதிகாரி.**
**பருத்தித்துறை.** (5677) **பணிமனை உத்தியோகத்தர்கள். ஊழியர்கள்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்



அன்னை
மடியில்
1921
★
03
★
10

ஆண்டவன்
அடியில்
2002
★
06
★
08

## நவரத்தினம் பாலகிருஸ்ணன்

கடந்த 08.06.2002இல் எங்களையெல்லாம் விட்டுப்பிரிந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் தமது அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (08.07.2002) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஐயனார் வீதி,* பா.நவரட்ணராஜா
*பருத்தித்துறை.* (5560) குடும்பத்தினர்.

# கேள்வி அறிவித்தல்

## கட்டடங்கள் திணைக்களம்,

## வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை

01. யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள வடக்கு - கிழக்கு மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரியினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்குரிய கேள்விகள், 2002ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை இத்திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.
02. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம்-7 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 750/-ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை 172 பற்றுச்சீட்டை யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து, 2002ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி அலுவலக நேரத்தில் பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

### வேலைகளின் விவரம்

01. வட்டுக்கோட்டை மிருக வைத்தியர் காரியாலயம் நிர்மாணித்தல்
02. கோப்பாயில் மிருக வைத்தியர் காரியாலயம் நிர்மாணித்தல்

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு, ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலைநாள்களில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.
திகதி 03.07.2002.

எந்திரி: அ.வேல்மாணிக்கம்,
*தலைவர்,*
*திணைக்கள கேள்விச்சபை.*

(C/22822)




C/22830)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட
24ஆம் அணியைச் சேர்ந்த எமது சக மாணவியாகிய
செல்வி சி.சங்கீதாவின் *அன்புத் தாயார்*
**திருமதி சிவநேசன் விஜயலக்சுமி**

அவர்கள் திருகோணமலையில் அமரத்துவம் அடைந்தமையையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம். (5701) 24ஆம் அணி மருத்துவபீடம்

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி மாணிக்கவாசகர்

கொக்குவில், பூநாறிமரத்தடியைப் பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் வாசன்ஸ் ஸ்ரூடியோ உரிமையாளரான சின்னத்தம்பி மாணிக்கவாசகர் நேற்று (07.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தையல்நாயகி (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் நல்லையா (பணிப்பாளர், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு, கொழும்பு) அவர்களின் மைத்துனரும் மனோகரன், சுகுமாரன், சிவகுமாரன், ஸ்ரீதரன், ஸ்ரீகாந்தன், தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தினி, தமயந்தி, வசந்தாதேவி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜுசன், தாரணி, ரஞ்சா, மதன், வாசுகி, ஸ்ரீபன் கெவின், பிருந்தா, லக்சுமன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கல்வயல்,*
*சாவகச்சேரி.* (5710) மா.தையல்நாயகி (மனைவி)

## அமரசிங்கம் அன்பழகன்

யாழ். சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சிவலிங்கப் புளியடியையும் பிரான்ஸையும் வதிவிடமாகவும் கொண்ட அமரசிங்கம் அன்பழகன் பிரான்ஸில் 04.06.2002 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரசிங்கம் (P.M.-நாரந்தனை) மற்றும் திலகவதி தம்பதியரின் அன்பு மகனும் கோபாலபிள்ளை நாகம்மா, வீரசிங்கம் நல்லம்மா, பரநிருபசிங்கம் இரத்தினாம்பாள், குலசிங்கம் சரோஜினிதேவி, ரூபாவதி கிருஷ்ணபாலா, கருணாவதி குலநாயகம், கலாவதி பூலோகசிங்கம், நந்தாவதி பஞ்சலிங்கம் (ஜேர்மனி), தயாவதி சத்தியநாதன் (பிரான்ஸ்), பூமலர் இராசரெத்தினம் ஆகியோரின் பெறாமகனும், புஸ்பவதி சதாசிவம், நல்லம்மா சண்முகநாதன், பரிமளாதேவி இராஜலிங்கம் மற்றும் இரவீந்திரன் (S.K.), நகுலேஸ்வரி தினகரன் இராஜேஸ்வரி, ஸ்ரீ.சுவேந்திரன் இராஜசிறி ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2002) செவ்வாய்க்கிழமை பரீஸில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*465/3,K.K.S. வீதி,*
*சிவலிங்கப்புளியடி,* திலகவதி அமரசிங்கம்
*யாழ்ப்பாணம்.* (5711) (தாய்)

## திருமதி ஜெகராஜலட்சுமி அருமைநாயகம்
### (செல்லம்)

தெல்லிப்பழை கிழக்கை நிரந்தர வதிவிடமாகவும் பங்களா ஒழுங்கை, கல்லாரை மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகராஜலட்சுமி அருமைநாயகம் அவர்கள் 04.07.2002 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் செல்லத்துரை அருமைநாயகம் (முன்னாள் S.K.அம்பிகை களஞ்சியம், சிமெந்து தொழிற்சாலை) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான விசுவநாதன் (மாஸ்ரர்) - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லத்துரை - திருமதி புஸ்பம் ஆகியோரின் அன்பு மருமகளும் ஜெனரட்னகனகராஜன் (ஆஸ்திரேலியா), விஜயலட்சுமி (ஆசிரியை, கொழும்புத்துறை இந்து ம.வி.), இரத்தினலட்சுமி (லண்டன்), விஸ்வகுமார் (லண்டன்), ஈஸ்வரகுமார் (லண்டன்), இரத்தினகுமார் (லண்டன்), சத்தியலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச்சகோதரியும் செல்வலட்சுமிப்பிள்ளை முத்துநாயகம், செல்லம்மா சிவபாலரத்தினம் (ஆசிரியை, மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்), செல்வமலர் சோமசேகரம், செல்வராணி நவரத்தினராசா, செல்வநாயகம் (விவசாய திணைக்களம், வவுனியா), செல்வேந்திரா பிரபாகரன், முருகதாசன் (நீர்ப்பாசனத் திணைக்களம், திருகோணமலை), சோமசுந்தரம் (பிரான்ஸ்), இரவீந்திரன் (பிரான்ஸ்), விமலாதேவி (ஆஸ்திரேலியா), இந்திராணி (லண்டன்), காலஞ்சென்ற பஞ்சரஞ்சிதம், கலாவல்லி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் பரமேஸ்வரி (ஆசிரியை, கலைமகள் ம.வி, வவுனியா), அவர்களின் சகலியும் கணேஸ்வரி (லண்டன்), அவர்களின் உடன்பிறவாச் சகோதரியும் காலஞ்சென்ற பரராஜசேகரம் (மாஸ்ரர், தொல்புரம்) அவர்களின் மருமகளும் மயூராஜ், நிருபா ஆகியோரின் பாசமிகு சித்தியும், கவிதா, கோகுலன், ராகுலன், சுகிர்தா ஆகியோரின் பெரியம்மாவும் கண்ணா, வீணா, தரன், திலக், தனுஷன், பகிதரன், ஸத்தீஸ், அர்த்தனா, ராஜ்குமார், ராஜ்மோகன், பத்மராஜா, பரமராஜா, ராஜரஜனி, கார்த்திகா, சிவசுதன், சிவபரன், சிவகாந்தன், கரிதாஸ், செந்தூரன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2002) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லாரையில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தெல்லிப்பழை, கட்டுப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பங்களா ஒழுங்கை,* செ:அருமைநாயகம்
*கல்லாரை, மல்லாகம்.* (5699) (கணவர்)

## அருட்செல்வி மேரி அலோசியஸ் (தி.கு)

சிலாபம் மறை மாவட்டத்தின், போளவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை - பூரணத்தின் மகளும் யாழ்.திருக்குடும்ப சபையின் துறவியுமாகிய அருட்செல்வி மேரி அலோசியஸ் அந்தோனிப்பிள்ளை நேற்று (07.07.2002) ஞாயிறு மாலை இளவாலை திருக்குடும்ப இல்லத்தில் இறைபதமடைந்தார்.

இவரது பூதவுடல் (இன்று(08.07.2002) திங்கள் மாலை பி.ப.3.30 மணிக்கு இளவாலை திருக்குடும்பச் சிற்றாலயத்தில் நடைபெறும் திருப்பலிப் பூசையின் பின் நல்லடக்கம் செய்யப்படும். இதனை அருட்தந்தையர், அருட்சகோதரிகள், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:-
*திருக்குடும்ப மாகாண இல்லம்,* அருட்செல்வி அருள்
*121,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.* (5715) (மாகாண ஆலோசகர்)

## சரசாலை உபதபாலகத்தை திறக்கக் கோரிக்கை

தென்மராட்சி,ஜூலை8

சரசாலை, மட்டுவில் வடக்கு ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளதால் சரசாலை உப தபால் அலுவலகத்தை மீண்டும் கனகன் புளியடிச் சந்தியில் இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இப் பகுதி மக்கள் வடபிராந்திய பிரதி அஞ்சல்மா அதிபரைக் மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

கனகன்புளியடிச் சந்தியில் இயங்கி வந்த சரசாலை உப அஞ்சல் அலுவலகம் தற்போது சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்துடன் இணைந்து இயங்குவதாகவும் -

மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறும் இப்பகுதியைச் சேர்ந்த வயோதிபர்கள் இதனால் மூன்று மைல்கள் தூரத்தில் உள்ள சாவகச்சேரிக்குச் செல்ல வேண்டியிருப்பதாகவும் - மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஒ-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை8

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ மாலை 4 மணி-பொலிகை பாரதி வி.க. எதிர் கம்பர்மலை யங்கம்பன்ஸ் பி.வி.க.

★ மாலை 5 மணி-அல்வாய் விக்கிரமன்ஸ் வி.க. எதிர் சமரபாகு நியூட் டன் வி.க.

(3-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை8

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கி என்பவற்றின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம நடத்தும் பெண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று கோண்டாவில் மறுமலர்ச்சிக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 3.30 மணிக்கு கோணடாவில் மறுமலர்ச்சி வி.க. எதிர் இணுவில் கலாஜோதி வி.க.

★ மாலை 4.30 மணி-மல்லாகம் ஆர்.டி.எஸ். வி.க. எதிர் அரியாலை திருமகள் வி.க.

(3-ரி-86)

மாதச் சம்பளம் ரூபா 5,00,000/=!
விவரங்களுக்கு 16/6, 23/6/2002 "உதயன்" நாளிதழைப் பார்க்கவும். அல்லது நேரில் வரவும்.
திருஞானாஸ்
141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (5367)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல் குதூகல ஆரம்பம்
ரஜனி, சிவாஜி, சௌந்தர்யா நடித்த
படையப்பா
காட்சிகள்: 11.00, 3.30, 5.30 (புதியநேரம்)

லக்ஷ்மி இணுவில்.
அஜித், பிரியாகில், ரகுவரன்
ஆசை (ரீல்ஸ்)
தினசரி: 10.30, 2.30, 6.30 (ப.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த், ஷமிதா செட்டி மன்சூர் அலிகான், வடிவேல், செந்தில் நடித்த
ராஜ்ஜியம் (ரீல்ஸ்)
தினசரி: 11.00, 3.00, 6.30 (புதிய நேரம்) (5666)

ராஜா யாழ்ப்பாணம்.
அஜித், ஜோதிகா, வடிவேல் ராதாரவி நடித்த
ராஜா
காட்சிகள்: தினசரி 10.30, 2.30, 5.30

DCM பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A/L DAY CLASS
பொருளியல்
வினா விடை S.வரதராஜன்
பாடத்திட்டம் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
ஆரம்பம் :- 10-07-2002 புதன் 8.00 மணி. (5734)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சின்னையா சின்னராசா**



*(முன்னாள் உரிமையாளர், அரியாலை மாம்பழம் சந்தி, அன்னை ஸ்ரோர்ஸ்)*

மலர்வு 10-04-1948 உதிர்வு 11-07-1999

திதி:- 08-07-2002

மூன்று ஆண்டுகளென்ன நூறாண்டுகள் சென்றாலும் மாறாது எம் துயரம்!

*"அன்னை ஸ்ரோர்ஸ்"*
*154, கண்டி வீதி,*
*மாம்பழம் சந்தி, யாழ்ப்பாணம்.* (5717)

- மனைவி
சி.பத்மாவதி,
மகன், மகள், மருமகன்.

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 22 - 06 - 1971
மறைவு 07 - 07 - 2002

**நவரெத்தினராசா ரவிசங்கர்** *(பியா)*

*(மருத்துவபீட இறுதியாண்டு மாணவன்)*

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு நாம் ஆறுதல் கூறுவதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(5713) மருத்துவபீட மாணவர் ஒன்றியம், *யாழ்.பல்கலைக்கழகம்.*

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 - 06 - 1949
மறைவு 28 - 06 - 1992

**அமரர் மாசிலாமணி தேவநேரு**

*(முன்னாள் கிராம உத்தியோகத்தர், தாவடி)*

திதி: 08-07-2002

*பத்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு நீங்கவில்லை.*

உங்கள் ஆத்மசாந்திக்கு இறைவனை வேண்டிநிற்கும்:
இணுவில் மேற்கு, இணுவில்
மனைவி, மக்கள், தாய், சகோதரர், மாமன், மைத்துனர்கள், உறவினர்கள். (5708)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தவப்பேறு 17 - 08 - 1937
சிவப்பேறு 08 - 06 - 2002

**அமரர் தம்பிப்பிள்ளை சூடாமணி**

*(பிரபல எழுத்தோவியர், அகிலன்ஸ்)*

*அன்பின் திருவுருவே! எமதருமை அப்பாவே!*
*பண்பின் இலக்கணமே! பாசத்தின் உறைவிடமே!*
*எம் குடும்பத்தின் கலங்கரை விளக்கே!*
*எம்மைத் திசை தெரியாது தவிக்கவிட்டு*
*பாதியில் பிரிந்து நீர் சென்றதேனோ?*
*இன்றோடு முப்பத்தொருநாள்கள் முடிந்ததையா*
*முப்பத்தொன்றென்ன! மூவாயிரத்து நூறு ஆனாலும்*
*எம் மனதை விட்டு ஆறாது உம் நினைவு....!*

உம் பிரிவால் துயருறும்:
*ஜெயாஸ் வீடியோ,*
*கைலாய பிள்ளையார் கோயிலடி,*
*நல்லூர்.*
மனைவி,மக்கள்,மைத்துனர்கள், மருமக்கள், பெறாமக்கள் மற்றும் உறவினர்கள். (5709)

## பல்கலை மாணவனின் பூதவுடல் மூதூருக்கு!

நேற்று மரணமான யாழ்.பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவனான நவரட்ணராஜா ரவிசங்கரின் பூதவுடல் கண்டிவீதி ஊடாக அவரது சொந்த ஊரான மூதூருக்கு எடுத்துச் செல்லபட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமையான நேற்று கண்டி வீதி போக்குவரத்துக்கு மூடப் பட்டிருந்தபோதும் -

இது கனரா அமைச்சர் திமகேஸ்வரன் படையதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கையின் பேரில் பூதவுடல் கண்டி வீதி ஊடாக எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

பூதவுடலுடன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 75 மாணவர்களும் சென்றுள்ளனர். (உ-3)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினர் நீதிவான்களி ம் பிரஸ்தாபித்தனர்.

யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் செயற்படுவதால், சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு இந்த வழக்குகளை இங்கு மாற்றுவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று நீதிவான்கள் சிறைச்சாலைத் திணைக்கள குழுவினரிடம் தெரிவித்துள்ளனர். (உ-3)

## தினந்தோறும் 150 நோயாளிகள்

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தினமும் 150இற்கு மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக ஆஸ்பத்திரி புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் திங்கள், சனி ஆகிய தினங்களில் கிளினிக்குகளும் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, மிருசுவில் ஆஸ்பத்திரியில் தினமும் 250இற்கு மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர்(ஓ-117)

## மர்மப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற சிறுவர்கள் இருவரும் அங்கு அதனை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அது எதிர்பாராத விதமாக வெடித்ததில் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். மற்றவர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படுகை யில் உயிரிழந்தார்.

இவர்களின் வீட்டுக்கு அண்மையில் கைவிடப்பட்ட படைமுகாம் ஒன்று காணப்படுவதாகவும் -

அங்கிருந்து சிறுவர்கள் பந்து போன்று காணப்பட்ட வெடிபொருளை எடுத்தனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (உ-12-9)

## பல்வேறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள், சேவைகள் வரி (ஜி.எஸ்ரி), தேசிய பாதுகாப்பு வரி என்பனவற்றை பெறுமதி சேர் வரிக்குள் ('வற்') மாற்றிடு செய்வதன் மூலம் விலைகள் கட்டணங்களைக் குறைக்கின்றோம்.

மருத்துவ உபகரணங்கள், செயற்கைக் கால்கள், ஊன்று கோல்கள், காதுகேட்கும் கருவிகள் ஆகியவற்றின் விலைகளும் குறையும்.

'வற்' வரி ஆகஸ்ட் முதலாந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

அப்பொழுது நாளாந்த பாவனையிலுள்ள ஏனைய பொருள்களின் விலைகளும் குறையும்.

தேங்காய் எண்ணெய், சமையல் எண்ணெய், துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், கைத்தொழில் இயந்திரங்கள், சூரிய மின்சக்தி உபகரணங்கள் ஆகியவற்றின் விலைகள் 3 வீதம் முதல் 13 வீதம் வரை குறையும்.

கட்டட நிர்மாணத்துறையும் இந்த நன்மையைப் பெறும். எரிபொருள் விலைகளின் குறைவையடுத்து கைத்தொழில் பொருள்களின் விலைகளும் குறையும்.

இவ்வாறு நிதியமைச்சர் தனது உரையில் அறிவித்தார். (உ-12)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிம் பிரதிநிதிகளும் இடம்பெறவேண்டும் என்ற கோரிக்கை தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகக் கரிகாலன் முஸ்லிம் அமைச்சர்கள் குழுவிடம் தெரிவித்தார் எனக்கூறப்பட்டது.

மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம்.எச்.மொஹமட், கப்பற்துறை அமைச்சர் ஏ.ஆர்.எம்.ஏ. காதர், திட்ட அமுலாக்கல் அமைச்சின் ஆலோசகர் அலிஸாஹிர் மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா ஆகியோர் குழுவில் இடம்பெற்றிருந்தனர். (உ-3-12)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் கரிகாலன் மற்றும் அரசியல் பொறுப்பாளர் விசு ஆகியோரை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்பு அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் மட்டக்களப்பு பிரதேச இராணுவ உயர் அதிகாரிகளையும் புருகோவிட் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-3-12-9)


## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் வருகை விரிவுரையாளர்கள்
ச.சுதர்சமோகன் ச.சாந்தரூபன்
ஆகியோரின் அன்புத் தந்தையார்

அமரர்
நாகலிங்கம் சங்கரலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர், பயிற்சி இயக்குநர், இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள்
IIS,யாழ்ப்பாணம்.
(C/22840)

## மதுரை, காமராஜர் பல்கலைக்கழகத்தின் M.A., M.Com.

பட்டப்படிப்புக்கான விரிவுரைகள் 03.08.2002 இல் ஆரம்பமாகவுள்ளன.

இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் தொடர்பான சகல விவரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விவரங்களுக்கு:-
S.அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(5705)

## வரவேற்பு

ஒவ்வொரு அச்சகம் ஒன்றிற்கு அச்சக வேலை தெரிந்த, முகாமை மற்றும் கணக்கு சம்பந்தமான வேலைக்கு ஆண் ஊழியர் ஒருவர் தேவை. சுய விபரங்கள், அனுபவங்கள் போன்ற விபரங்களுடன் கடிதமூலம் தொடர்புகொள்ளவும்.
51, பலாலி வீதி,
இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

## இன்று ஆரம்பம்!

கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
A/L 2003
பங்குடமை
திங்கள், செவ்வாய்
3.15 - 4.15 p.m.
BEACON யாழ்.
வெலிங்டன் சந்தியருகில்.

## BARATHY

கல்விநிறுவனம் சித்தன்கேணி

CHEMISTRY - திரு.மகேஸ்வரன்
A/L 2003, 2004 - பௌதிக இரசாயனம்
ஆரம்பம்:- 11-07-2002 வியாழன் 4.30 (ப.நே.)

PHYSICS - திரு.குகன்
A/L 2003, 2004 - இலத்திரனியல்
ஆரம்பம்:- 08-07-2002 திங்கள் 4.00 (ப.நே.)
(5680)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மருத்துவபீடத்தின் இறுதியாண்டு மாணவன்
திரு.நவரட்ணராசா ரவிசங்கர்

07-07-2002 ஞாயிற்றுக்கிழமை மரணமானதைக் கேள்வியுற்று மிகவும் துயருடைகின்றோம். திரு கோணமலை மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் இழப்பால் துன்பமடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம். 22, 23 ஆம் அணி, மருத்துவபீட மாணவர்கள்.
(5683)

## MS Office

புதிய பிரிவுகள் ஆரம்பம்
காலம்: 14-07-2001

DIPLOMA IN MICROSOFT OFFICE இற்கான புதிய வகுப்பு பிரிவுகள் 14-07-2002 அன்று காலை 10.00 மணிக்கு ஆரம்பமாக இருக்கின்றன. இப்பிரிவில் இணைந்துகொள்ளும் மாணவர்கள் 14-07-2002 இற்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொண்டு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.
(C/22840)

## COOL LAMINATION - கவர்டுதல்

நினைவுமலர் கவர், புத்தககவர், விழாமலர்கவர், புகைப்பட அல்பம் என்பன Laminating செய்து கொடுக்கப்படும்.

பிள்ளையார் அச்சகம், ஆகக் குறைந்த கட்டணம்
376, பருத்தித்துறை வீதி, நல்லூர். ரூபா 3/=




## IPAS
## Institute of Professional Accounting Studies

☆ Chartered Accounting ☆ aat ☆SLIM
☆ CIMA (U.K.) ☆ CMA (SriLanka)

நீங்களும் ஓர்!

☆ Accountant ☆Finance Manager
☆ Management Consultant
☆ Tax Consultant ☆ Managing Directors

போன்ற உயர்மட்டப் பதவிகளை வகிக்க விரும்புகின்றீர்களா? தொழில்கள் கற்கைநெறிகளைப் பயிலவும் உங்களை தொழில்சார் கற்கைநெறிகளுடன் மாணவர்களாகப் பதிவுசெய்யவும் தற்போது முடியும். எல்லா தொழில்சார் கற்கைநெறிகளுக்குமான அடிப்படை ஆரம்ப வர்த்தகத்துறைசார் கணக்கியல்துறைசார் ஆங்கில அறிவினை வழங்குவதற்கான

'Business Communication'

வகுப்புகள் Visual study system முறை மூலம் நடத்தப்படவுள்ளது.

☆ தொழில்சார் நிறுவனங்களுடன் உங்களை IPAS நிறுவனத்தினூடாக மாணவராகப் பதிவுசெய்துகொள்வதற்கும் 'Business Communication' இல் உங்களை இணைத்துக்கொள்ளவும் IPAS உடன் தொடர்பு கொள்ளவும்.

NO. 10, செம்மணி வீதி, நல்லூர். (கிட்டுபூங்கா முன்பாக)
தொலைபேசி - 021-3548 மின்னஞ்சல் ipask@yahoo.com

'To provide unmatched and reliable educational services to the Northern students and to be the best Institution for professional studies in Sri lanka' (C/22841)


## மரண அறிவித்தல்

### விஸ்வநாதன் விஜயகரன் (விஜயன்)

கொக்குவில், கொலங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், கடையவல் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதன் விஜயகரன் (விஜயன்) நேற்று (7.7.2002) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்ற விஸ்வநாதன் - விமலாம்பிகையின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற விஜயலக்ஷ்மி, விஜயேந்திரன் (விஜி - பிரான்ஸ்), விஜயகுமார் (ரூபா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இளமுருகனின் மைத்துனனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:-
பலாலி வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:-
சுசிலைசலிங்கம் (லிங்கம்)
கொலங்கலட்டி.
(C/22839)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.